

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு அமைப்பாளர் ஒருவரை பதவியில் இருந்து நீக்க அக்கட்சியின் மேலிடம் தீர்மானித்துள்ளதாக தகவல்.

மாணவி ஒருவரின் மன உளைச்சலுக்கும் மரணத்துக்கும் அந்த பிரமுகர் ஏதுவாக இருந்தாரென பல தரப்பிலும் சொல்லப்பட்டதையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்.

இந்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைக்கும் அரச மேலிடம் பணித்துள்ளதாக அறியமுடிந்தது.

**உஷ்**


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 227 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(09.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 10, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12




## கமெண்ட் கந்தர்



ஒரு பெண்ணின் நிலைமையையே புரிஞ்சுக்கொள்ள முடியேல்ல... என்ன மகளிர் விவகார அமைச்சரோ...



# இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்தாக வேண்டும்

## உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் அண்மையில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யும் உத்தரவைக் கோரி டாக்டர் குணதாச அமரசேகர உள்ளிட்ட குழுவினர்...

» 02 பக்கம்

## இந்திய -பாக். எல்லையில் பெரும் பதற்றம்



# ‘ஒபரேஷன் சிந்தூர்’ இன்னும் முடியவில்லை

## மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிப்பு

» 12 பக்கம்




# மாணவி மரணத்துக்கு நீதி தேவை!

## கொழும்பில் பாரிய போராட்டம் கொட்டும் மழையிலும் பேரணி




டி.யுவராஜ்

» 02 பக்கம்

# சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட அர்ச்சுனா எம்.பி.



சபை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் இடையூறுகளை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் யாழ். மாவட்ட எம்.பியான அர்ச்சுனா இராமநாதன் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு...

» 02 பக்கம்

# கொட்டாஞ்சேனை மாணவி மனநோய் சிகிச்சைப் பெற்றாரா?



## அமைச்சர் சரோஜாவின் கூற்றுக்கு மனோ கணேசன் கடும் ஆட்சேபனை



கொழும்பிலுள்ள பிரபல தமிழ் மகளிர் கல்லூரி மாணவியொருவரின் தற்கொலை, அதன் தொடர்ச்சியாக நேற்று வியாழக்கிழமை (08) பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை பகுதிகளில் இடம்பெற்ற பெற்றோரின் ஆர்ப்பாட்டங்கள் சபையிலும் எதிரொலித்த நிலையில், அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று (08) தமிழ் முற்போக்குக் கூட்டணியின்...

» 02 பக்கம்

# ஜே.எம்.ஓ. அறிக்கை உளவியலை சொல்லுமா?

## சரோஜாவிடம் வினவினார் நாமல்



» 02 பக்கம்

# 116 உள்ளூர் மன்றங்களில் தே.ம.ச. தனி ஆட்சி

## 120 மன்றங்கள் எதிர்க்கட்சிகள் வசம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவுகளுக்கமைய தேசிய மக்கள் சக்தி 265 உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இருந்தபோதும், நேரடியாக சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை ஆசனங்களை 116 மன்றங்களிலேயே பெற்றுக்கொண்டுள்ளது. 120 உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மைப் பலத்தை தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டிருந்தாலும்...

» 02 பக்கம்

# ஒரு நாட்டுக்கு எதிராக எமது எல்லைகளை பயன்படுத்த இடமளியோம்!

» 02 பக்கம்

## அமைச்சரவைப் பேச்சாளர் உறுதி

# கொழும்பு மாநகர சபையை விட்டுக்கொடுக்க முடியாது

## போட்டிக்களத்தில் இறங்கியது தே.ம.ச.

“கொழும்பு மாநகர சபையில் தனிக்கட்சி என்ற அடிப்படையில் நாங்களே அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளோம்.

» 02 பக்கம்

## மாணவி...

“கொட்டாஞ்சேனை சிறுமியின் பரிதாப மரணத்துக்கு எமது சமூகமே காரணம். இன்று இந்த சிறுமிக்காக கூடிய சகலரும் இன்றுடன் இதை முடித்துவிடுவார்கள். நாளை மீண்டும் ஒரு ஹம்சிகாவுக்கு இது நடந்தால் மீண்டும் கூடுவார்கள். இது தான் நாட்டின் நிலைமை. அந்த சிறுமி தனக்கு நடந்ததை வெளியில் கூறியும் அவளுக்கு நீதி கிடைக்கவில்லை. அப்பொழுதே இதற்கு தீர்வு கிடைத்திருந்தால் இன்று அவர் உயிரோடு இருந்திருப்பார்” என்று தெரிவித்து பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

அத்தோடு குறித்த மாணவிக்கு நீதி கிடைக்கும்வரை தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்படுமென்றும் அவர்கள் நேற்று (09) எச்சரிக்கை விடுத்தனர்.

கொழும்பு – கொட்டாஞ்சேனை பகுதியில் அண்மையில் தற்கொலை செய்து கொண்ட மாணவியின் மரணத்துக்கு நீதிகோரி, பம்பலப்பிட்டி பகுதியில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலைக்கு முன்னால் நேற்று (08) காலையிலிருந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அதன்போதே பெற்றோர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தனர்.

காலை 10 மணியளவில் மாணவி கல்விகற்ற பாடசாலைக்கு அருகில் ஒன்றுகூடிய பாடசாலை பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர், உயிரிழந்த மாணவிக்கு ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இதையடுத்து, பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராகவும் கல்வி அமைச்சின் மந்தகதியான செயற்பாடுகளுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பியதோடு ஆக்ரோஷமான வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட பலர் பாடசாலை நிர்வாகத்தையும் அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும் குறை கூறினர்.

குறிப்பாக, ஒரு பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் 05 ஆண்டுகள் மாத்திரமே பணியாற்ற முடியும். ஆனால் இந்தப் பாடசாலையில் அப்படி இல்லை. பெரும்பாலான ஆசிரியர்கள் 08, 09 வருடங்களை கடந்து பணியாற்றி வருகின்றனர். அதேபோன்று இந்தப் பாடசாலை அதிபரும் காலம் கடந்து செயற்பட்டு வருகின்றார் என்றனர்.

இதன்போது தாய் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

‘‘இந்தப் போராட்டம் இன்றோடு முடிந்துவிடும் என்று தான் எனக்கு தோன்றுகிறது. எங்களுடைய அரசாங்கமும் கல்வியமைச்சும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவது கிடையாது. இது 10, 15 ஆவது சம்பவம். இந்தப் பிள்ளை இறந்தது மட்டும் தான் உங்களுக்குத் தெரிகிறது. ஆனால், இதற்கு முன் நடந்த சம்பவங்கள் உங்களில் எத்தனை பேருக்கு தெரியும். இவ்வாறான சம்பவங்கள் நடக்கும் போது என்னுடைய பிள்ளையை எப்படி நம்பி நான் பாடசாலைக்கு அனுப்புவது?

சிறுமியின் பரிதாப மரணத்துக்கு எமது சமூகமே காரணம். இன்று இந்த சிறுமிக்காக கூடிய நீங்கள் இன்றுடன் இதை முடித்துவிடுவீர்கள். நாளை மீண்டும் ஒரு ஹம்சிகாவுக்கு இது நடந்தால் மீண்டும் கூடுவீர்கள். இது தான் இந்த நாட்டின் நிலைமை. அந்த சிறுமி தனக்கு நடந்ததை வெளியில் கூறியும் அவளுக்கு நீதி கிடைக்கவில்லை. அப்பொழுதே இதற்கு தீர்வு கிடைத்திருந்தால் இன்று அவர் உயிரோடு இருந்திருப்பார்.

ஒரு பிள்ளை தனக்கு நடந்த விடயத்தை பாடசாலை நிர்வாகத்திடம் கூறும்போது நீங்கள் அதற்கு சரியான தீர்வை வழங்கி அந்தப் பிள்ளைக்கு கல்வி கற்பதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இங்கு அந்தப் பிள்ளையை துரத்தி அடித்துள்ளீர்கள்.

நான்கு பேர் சேர்ந்து திருடும்போது அதை ஒருவர் தட்டிக் கேட்டால் அவரை நீங்கள் திருடன் என்று சொல்வீர்களா? ஆனால் இந்தச் சிறுமியின் விடயத்தில் அது தான் நடந்துள்ளது. உடனடியாக சம்பந்தப்பட்ட ஆசிரியர் பதவி நீக்கப்பட வேண்டும். சிறுமிக்கு விரையில் நீதி கிடைக்க வேண்டும்’’ எனத் தெரிவித்தார்.

கொட்டும் மழையிலும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

உயிரிழந்த மாணவிக்கு நீதிகோரி பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தினால் டுப்ளிகேஷன் வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதோடு, அங்கு நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் கலகத் தடுப்புப் பிரிவு வரவழைக்கப்பட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, இந்தச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விரைவான விசாரணைகளை ஆரம்பித்து உயிரிழந்த மாணவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மீண்டும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் தொடரும் என்றும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த மாணவி துஷ்பிரயோகத்துக்கு ஆளானதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்ட சர்ச்சை எழுந்ததையடுத்து, பாடசாலை அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## கொழும்பு...

ஆட்சியமைப்பதற்கான முழு அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது. அதற்கமைய, கொழும்பு மாநகர சபையில் நாங்களே ஆட்சியமைப்போம்” என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (08) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஒவ்வொருவரும் தேர்தல் முடிவுகளை அவர்களுக்கு ஏற்றவாறு விவரிக்க முடியும். ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பவை தனித்தனி தேர்தல்களாகும். இந்த மூன்று தேர்தலிலும் மக்களின் நிலைப்பாடுகள் வேறுபட்டவையாகும். உள்ளூராட்சித் தேர்தலை ஜனாதிபதித் தேர்தல் பொதுத் தேர்தலுடன் ஒப்பிட முடியாது.

வரலாற்றில் தனி கட்சி என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி 166 தொகுதிகளில் வெற்றிப்பெற்றுள்ளது. எங்களால் பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்கவும் முடியும். உதாரணமாக தேசிய மக்கள் சக்தியில் வெற்றியடைய முடியாமல் போயுள்ளது என்று கூறப்படும் அகலவத்தை பிரதேச சபை 20 உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தேசிய மக்கள் சக்திக்கு 06 ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சக்திக்கு 06 ஆசனங்களும் கிடைத்துள்ளன. எனவே இருத் தரப்பினராலும் ஆட்சியமைக்க முடியும். எனவே உள்ளூராட்சி சபைகளில் பெரும் பலத்துடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும்.

கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்கான முழு அதிகாரம் எங்களுக்கு இருக்கிறது. தனிக் கட்சி என்ற அடிப்படையில் நாங்களே அதிக வாக்குகளையும் ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளோம். அதற்கமைய, நாங்கள் ஆட்சியமைப்போம்’’ என்றார்.

## ஒரு நாட்டுக்கு...

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான பதற்ற நிலையினால் இலங்கையின் பாதுகாப்பு தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கவும் போவதில்லை. ஒத்துழைப்பு வழங்கவும் போவதில்லை. இந்திய சமுத்திரத்தில் பூகோள அரசியல் மோதல்களில் நாங்கள் தலையிடவும் மாட்டோம். ஒரு நாட்டுக்கு எதிராக செயற்படுவதற்கு எமது நிலத்தையோ கடற்பரப்பையோ வான் பரப்பையோ பயன்படுத்த இடமளிக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (08) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

‘‘இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான பதற்ற நிலையினால் இலங்கையின் பாதுகாப்பு தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கமைய, இந்திய சமுத்திரத்தில் பூகோள அரசியல் மோதல்களில் நாங்கள் தலையிட மாட்டோம். அதனால், எமது தனித்துவத்தை பாதுகாத்துக்கொண்டு முறையாக செயற்படுவோம்.

அதேபோன்று, பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எந்தவொரு விதத்திலும் அனுமதிக்கவும் மாட்டோம். அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் மாட்டோம். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான செயற்பாடுகளில் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

அதனால், வலயத்தின் பாதுகாப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் வலயத்தின் சமாதானத்தை மிக முக்கியமானதாக கருதுகிறோம். அதற்காக நாங்கள் செயலாற்றுவோம்.

நிலைமை தொடர்பில் மிகவும் கவனத்துடன் செயற்படுகிறோம். பாதுகாப்பு, பொருளாதார பாதுகாப்பு தொடர்பில் அவதானித்து வருகிறோம். இந்த நிலைமையின் தன்மைக்கமைய தெற்காசிய அரசியல் மற்றும் இந்திய சமுத்திர பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகிறோம். நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டு அமைச்சுகளுடன் கலந்துரையாடி இதுதொடர்பில் கவனம் செலுத்துவோம்.

வலய நாடுகள் என்ற அடிப்படையில் இந்தியாவும் பாகிஸ்தானும் எமக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவி வழங்கியுள்ளன. எதிர்காலத்திலும் உதவிகளை வழங்கவுள்ளன. அதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் சிறந்த இராஜதந்திர தொடர்புகளை பேணி வருகிறோம். ஒருசில பிரச்சினைகள் அவர்கள் தீர்த்துக்கொள்ள வேண்டியவை. எந்தவொரு காரணத்துக்காகவும் பயங்கரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவும் மாட்டோம்.

மேலும், ஒரு நாட்டுக்கு எதிராக செயற்படுவதற்கு எமது நிலத்தையோ கடற்பரப்பையோ ஆகாய எல்லையையோ பயன்படுத்த இடமளிக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறோம். எது எவ்வாறாயினும் யுத்த மோதல்களை குறைத்து வலய அமைதியை பாதுகாத்து பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக செயற்படுவதே எங்களின் குறிகோளாகும்’’ என்றார்.

## சபையிலிருந்து...

கூடியது முதல் அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. பல்வேறு விடயங்களுக்கும் ஒழுங்குப்பிரச்சினைகளை எழுப்பி கருத்துகளை முன்வைத்துக் கொண்டிருந்தார். எனினும் அவருக்கு எதிராக ஏற்கனவே அமுலில் உள்ள அவரின் உரைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான தடை காரணமாக அவரின் கருத்துகள் வெளிவரவில்லை.

இவ்வாறாக ஒவ்வொரு விடயங்களுக்கும் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பியும் இடையீட்டு கேள்விகளை முன்வைத்தவாறும் அர்ச்சுனா எம்.பி. இருந்த நிலையில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ‘அ’ அட்டவணையின் ஒழுங்குவிதிகளின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க உரையாற்றிக்கொண்டிருந்தபோது அர்ச்சுனா எம்.பி. தொடர்ந்து ஒழுங்குப் பிரச்சினைகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தினார். இதனால் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அர்ச்சுனா எம்.பியுடன் கடும் தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த அரவிந்த் செனரத் எம்.பி. அர்ச்சுனா எம்.பியை இருதடவைகள் எச்சரித்தபோதும் அவர் எதனையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவரை சபையிலிருந்து வெளியேற்ற நேரிடும் எனவும் எச்சரித்து இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதும் அர்ச்சுனா எம்.பி. அடங்காத நிலையில் அவரை சபையிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு சபைக்கு தலைமைதாங்கிய உறுப்பினர் அறிவித்தார்.

ஆனால், அர்ச்சுனா எம்.பி. வெளியேற மறுத்த நிலையில் கட்டளையில் உள்ள விடயத்தை அர்ச்சுனாவுக்கு அறிவித்த சபைக்கு தலைமைதாங்கிய உறுப்பினர் படைக்கல சேவிதர்களினால் வெளியேற்றப்பட நேரிடும் எனவும் கூறினார். இதனையடுத்து, கூச்சல் குழப்பங்களுக்கிடையில் அர்ச்சுனா எம்.பி. சபையிலிருந்து வெளியேறிச் சென்றார்.

## 116 உள்ளூர்...

பெரும்பான்மை ஆசனங்களை வேறு அரசியல் கட்சிகளும் குழுக்களும் பெற்றுக்கொண்டுள்ளன. அதன் காரணமாக அந்த உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய கட்சிகளும் 29 உள்ளூராட்சி சபைகளில் சரிக்கு சமமாக ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன.

நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்திக்கு 3,926 உறுப்பினர்கள் உரித்தாகியுள்ளதுடன், மொத்தமாக 4,503,930 (43.26வீதம்) வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல் முடிவுகளுக்கமைய 23 மாநகர சபைகள், 25 நகர சபைகள் மற்றும் 217 பிரதேச சபைகளில் இந்த கட்சி வெற்றியை ஈட்டிக்கொண்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி 307,657 (2.96வீதம்) வாக்குகளைப் பெற்றுக்கொண்டு 377 ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைய, அந்தக் கட்சிக்கு 03 மாநகர சபைகள், ஒரு நகர சபை, 33 பிரதேச சபைகள் உள்ளடங்களாக 37 சபைகளில் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி 2,258,480 (21.69வீதம்) வாக்குகளைப் பெற்றுக்கொண்டு 1,767 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 02 நகர சபைகள், 12 பிரதேச சபைகள் உள்ளடங்களாக 14 சபைகளில் அதிகாரத்தை கைப்பற்றிக்கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 954,517 (9.17வீதம்) ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு 742 ஆசனங்களை கைப்பற்றியுள்ளதுடன் இந்தக் கட்சிக்கு எந்த சபையிலும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி 488,406 (4.69வீதம்) வாக்குகளைப் பெற்று 381 ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ளதுடன் இந்தக் கட்சியினாலும் சபை அதிகாரத்தை கைப்பற்ற முடியாமல் போயுள்ளது.

அதேபோன்று, சர்வசன அதிகாரம் 226 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 294,681 வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. பொதுஜன முன்னணி 387,098 வாக்குகளைப் பெற்று 300 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் 02 நகரசபைகளும் 03 பிரதேச சபைகளும் உள்ளடங்களாக 05 சபைகளில் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளதுடன் மொத்தமாக 116 ஆசனங்களை பெற்றுக்கொண்டுள்ளது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 03 சபைகள் என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

ஏனைய 12 சபைகளின் அதிகாரத்தை வேறுசில அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கைப்பற்றி கொண்டுள்ளன.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி 258 உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், கொழும்பு மாநகர சபை மற்றும் தங்காலை நகர சபை உள்ளிட்ட 132 உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்ட ஆசனங்களை விட அதிக ஆசனங்களை ஏனைய கட்சிகள் கைப்பற்றியுள்ளன.

லக்கல பிரதேச சபை, உக்குவெல பிரதேச சபை, கலேவெல பிரதேச சபை, ரத்தொட்ட பிரதேச சபை, அம்பகஹகோரள பிரதேச சபை, ஹட்டன் - டிக்கோயா நகர சபை, தலவாக்கலை - லிந்துலை நகர சபை, மஸ்கெலியா பிரதேச சபை, அக்கரப்பத்தனை பிரதேச சபை, நுவரெலியா பிரதேச சபை, கொத்மலை பிரதேச சபை, கண்டி உடபலாத பிரதேச சபை, நாவலப்பிட்டி பிரதேச சபை, பாதஹேவாஹெட பிரதேச சபை, புலத்கொஹுபிட்டிய பிரதேச சபை, யட்டியந்தோட்டை பிரதேச சபை, கண்டி பிரதேச சபை, மாவத்தகம பிரதேச சபை, மெதவாச்சி பிரதேச சபை, பிங்கிரிய பிரதேச சபை, குளியாப்பிட்டிய பிரதேச சபை, மாத்தளை மாநகர சபை, தம்புளை பிரதேச சபை, பதியத்தலாவ பிரதேச சபை, தணமல்வில பிரதேச சபை, முலடியன பிரதேச சபை, வெலிகந்த பிரதேச சபை, நிவித்திகல பிரதேச சபை, புலத்சிங்கள பிரதேச சபை, மத்துகம பிரதேச சபை, ஹொரவப்பொத்தானை பிரதேச சபை, படல்கும்புர பிரதேச சபை, வலல்லாவிட பிரதேச சபை, பண்டாரகம பிரதேச சபை, வத்தளை மாபோல நகர சபை, கொபெய்கனே பிரதேச சபை என்பவற்றில் எதிர்க்கட்சிகள் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன.

அதேபோன்று, ஜா – எல நகர சபை, பேலியகொட பிரதேச சபை, ஆராச்சிக்கட்டுவ நகர சபை, இரத்தினபுரி பிரதேச சபை, மெதகம பிரதேச சபை, கந்தளை பிரதேச சபை, நாகொட பிரதேச சபை, புத்தல பிரதேச சபை, பெந்தொட்டை பிரதேச சபை, மாலிம்பட பிரதேச சபை, ஹல்துமுல்ல பிரதேச சபை, ரஜ்கம பிரதேச சபை, மஹஓய பிரதேச சபை, கந்தகெட்டிய பிரதேச சபை, பதுளை - லுணுகல பிரதேச சபை மற்றும் கொலன்னாவ நகர சபை போன்ற சபைகளில் தேசிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டு ஆசனங்களை விட அதிக ஆசனங்களை எதிர்க்கட்சிகள் பெற்றுக்கொண்டுள்ளன.

கொழும்பு நகர சபையின் சார்பில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் 48 பேர் கிடைத்திருந்தபோதும் எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளுக்கு மொத்தமாக 69 ஆசனங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கமைய, கொழும்பு நகர சபையில் அநேகமாக எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைக்கக் கூடும். அதேவேளை, தேசிய மக்கள் சக்தி தனியாக பெற்றுக்கொண்ட ஆசனங்கள் ஏனைய கட்சிகள் தனியாக பெற்றுக்கொண்ட ஆசனங்களில் மொத்த எண்ணிக்கை சமமாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கொட்டாஞ்சேனை...

தலைவரும் எம்.பியுமான மனோகணேசன் கொழும்பிலுள்ள பிரபல தமிழ் மகளிர் கல்லூரி மாணவியின் தற்கொலை, அதன் தொடர்ச்சியாக நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

கொட்டாஞ்சேனையில் அண்மையில் தனது உயிரைமாய்த்துக்கொண்ட பாடசாலை மாணவி மனநோயாளி அல்ல எனவும் அவ்வாறு கூறியமைக்காக மகளிர் விவகார அமைச்சர் மன்னிப்பு கோரவேண்டும் எனவும் சபையில் மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், அவ்வாறான வார்த்தைப் பிரயோகத்தை பாராளுமன்ற ஹன்சார்ட்டிலிருந்து அகற்ற வேண்டுமெனவும் அவர் சபையில் கேட்டுக்கொண்டார்.

கொட்டாஞ்சேனை மாணவி தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அப்போது அதற்கு பதிலளித்த சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ், ‘‘அந்த மாணவி தொடர்பிலான விபரங்களை முன்வைத்ததுடன் பெற்றோரை விசாரணைக்கு வருமாறு அழைத்ததாகவும் ஆனால் அவர்கள் அமைச்சுக்கு சமுகமளிக்கவில்லை’’ எனவும் கூறினார்.

அதற்கு பதிலளித்த மனோ கணேசன் எம்.பி.,

‘‘அமைச்சு அதிகாரிகள் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று விசாரணை செய்ய வேண்டுமே தவிர அவர்கள் உங்களிடம் வரும் வரை காத்திருக்க வேண்டுமா? என்று சாடினார். அத்துடன் மன நோயாளி என்று கூறியமைக்காக அமைச்சர் சரோஜா மன்னிப்புக்கோரவேண்டும்’’ எனவும் கேட்டார்.

இது தொடர்பில் அவர் பேசுகையில்,

‘‘கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை மாணவிக்கு நிகழ்ந்த அநீதி தொடர்பில் அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் பெற்றோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆயுதப் போராளிளோ, கலகக்காரர்களோ அல்ல, அநீதியை தட்டிக்கேட்க வந்தவர்கள். அவர்கள் மீது பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் செய்ய முற்படுகின்றனர். இது தவறு. உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும்.

கடந்த வருட இறுதியில் இந்த 15 வயது மாணவிக்கு அநீதி நடந்துள்ளது. பாலியல் சேஷ்டை நடந்துள்ளது. கல்வித்திணைக்களம் விசாரணை செய்துள்ளது. பொலிஸ் விசாரணை நடந்துள்ளது. ஒரு ஆசிரியர் கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவியின் பெற்றோர் தமது மகளை அந்தப் பாடசாலையில் இருந்து விலக்கி வட கொழும்பில் ஒரு பாடசாலையில் இணைத்துள்ளார்கள். இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு மாத காலத்துக்கும் பிறகு அந்தப் பகுதியில் இருக்கும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் நிறுவுனர், அந்த மாணவியை பலரது முன்னிலையில் வைத்து மிக மோசமாக அவமானப்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் அந்த மாணவி பாரிய மன உளைச்சலுக்கு ஆளாகி, தனது இருப்பிடத்தில் இருந்து ஏழாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

குறித்த மாணவிக்கு இடம்பெற்ற இந்த அநீதி காரணமாகவே கொட்டாஞ்சேனை பகுதி மக்கள் குறித்த தனியார் கல்வி நிறுவனத்துக்கு முன்னால் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்து, அங்கிருந்து மாணவி படித்த பாடசாலைக்கு முன்பாக வரை சென்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இதன் போது அங்கு வந்த கல்வி அதிகாரிகள், இது தேசிய பாடசாலை. அதனால் பத்தரமுல்லைக்கு சென்று இது தொடர்பில் முறையிடுமாறு தெரிவித்துள்ளனர்.

எனவே, மாணவிக்கு இடம்பெற்றுள்ள இந்த அநீதி தொடர்பில் அரசாங்கம் கல்வி அமைச்சின் அதிகாரிகளை நியமித்து முறையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் வட கொழும்பில் உள்ள குறித்த தனியார் கல்வி நிறுவனத்தின் பொறுப்பதிகாரி அரசாங்கத்தின் கட்சியைச் சார்ந்தவர். வட கொழும்பு அமைப்பாளர். அதனால் இதற்கு நீதி கிடைக்குமா என்று மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தை நாங்கள் அரசியலாக்கவில்லை. அதனால் அரசாங்கம் முறையான விசாரணை மேற்கொண்டு குறித்த மாணவியின் பெற்றோருக்கு நீதி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு உடனடியாக விசேட குழு அமைத்து விசாரணை நடத்த வேண்டும்’’ என்றார்.

இதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பதிலளிக்கையில்,

‘‘இந்தச் சம்பவம் 2024 டிசம்பர் மாதமே இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான ஆவணங்களை பார்க்கும்போது குறித்த மாணவி மன வைத்தியரிடம் சிகிச்சை பெற்று வருவதாக குறித்த மாணவிக்கு பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்ற பின் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று இந்த மாணவியின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான ஒரு ஆவணம் தயாரித்திருக்கிறோம்.

அத்துடன் குறித்த மாணவியின் பெற்றோரை கடந்த 05ஆம் திகதி சிறுவர் பாதுகாப்புப் பிரிவுக்கு வந்து முறைப்பாடு ஒன்றை தெரிவிக்குமாறு நான் சொல்லியிருந்தேன். ஆனால் அவர்கள் இதுவரை அங்கு வரவில்லை. அதேபோன்று இன்று (நேற்று)அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றபோது மகஜர் கையளிக்க வந்த சந்தர்ப்பத்திலும் அந்த பெற்றோரை வந்து சந்திக்குமாறு தெரிவித்தபோதும் அவர்கள் வரவில்லை. நாளை (இன்று)அல்லது நாளை மறுதினம் (நாளை) அவர்கள் எங்களை வந்து சந்திப்பதாக கூறியிருக்கிறார்கள்.

முகநூலிலோ சமூக வலைத்தளங்களிலோ நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாது. சட்ட நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய இடங்களுக்கு செல்ல வேண்டும். இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று நாங்களும் எதிர்பார்க்கிறோம். அதனால் சம்பந்தப்பட்டவர்கள் உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு நீதியை கோர வேண்டும்’’ என்றார்.

இதனையடுத்து மீண்டும் எழுந்த மனோ கணேசன் எம்.பி., ‘‘உயிரிழந்த மாணவியின் பெற்றோர் தங்களிடம் வர வேண்டும் என்று எதிர்பார்க்காமல் அவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுங்கள். உங்களின் அதிகாரிகளை அவர்களின் வீட்டுக்கு அனுப்புங்கள். பிள்ளையை இழந்த வலி அவர்களுக்குத்தான் தெரியும். அவர்கள் யாரும் சட்டத்தை கையில் எடுக்கவில்லை. அதனால் இந்தச் சம்பவத்தை நீங்கள் திசை திருப்ப முயற்சிக்கக் கூடாது. அதேநேரம் அந்தப் பிள்ளையை மன நோயாளி என வர்ணிக்க முயற்சிக்கின்றீர்கள் அவ்வாறு செய்ய வேண்டாம்’’ என்றார்.

அதனைத் தொடர்ந்து மீண்டும் எழுந்த அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், ‘‘குறித்த மாணவி தொடர்பில் நான் தெரிவித்த விடயங்கள் அனைத்தும் பொலிஸ் விசாரணையில் இருந்து பெறப்பட்ட அறிக்கையில் இருந்தவை. அவ்வாறில்லாமல் நான் எதனையும் நினைத்துக் கூறவில்லை’’ என்றார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிக்கையில்,

‘‘இந்தச் சம்பவம் தொடர்பில் நான் பம்பலப்பிட்டி பொலிஸில் கேட்டபோது இது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் ‘பி’ அறிக்கை ஊடாக நீதிமன்றத்துக்கு அறிவித்திருப்பதாகவும் அவரை கைது செய்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அடுத்த கட்ட நடவடிக்கையை நீதிமன்றமே மேற்கொள்ள வேண்டும். இதில் எங்களுக்கு தலையிட முடியாது. என்றாலும் விசாரணை நடவடிக்கையில் எந்த குறைபாடும் இல்லை. மாணவி தொடர்பான இரண்டாவது சம்பவம் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்’’ என்றார்.

மாணவியின் உயிரிழப்பு தொடர்பில் நாமல் ராஜபக்ஷ எம்.பி. கருத்துகளை முன்வைத்த நிலையில் அர்ச்சுனா எம்.பியும் கருத்துகளை முன்வைத்தார்.

## இந்தியாவுடனான...

நேற்றுமுன்தினம் (07) உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்தனர்.

இந்த மனுவில் சட்ட மா அதிபர், பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சமீபத்தில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் அரசியலமைப்புக்கும் சர்வதேச சட்டத்துக்கும் முரணானது என்று மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்கள் குறித்து பொதுமக்களுக்கு இன்னும் தெரிவிக்கப்படவில்லை என்றும் இது மக்களின் அரசியலமைப்பு உரிமைகளை மீறுவதாகும் என்றும் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு தீங்கு விளைவித்துள்ளதாகவும் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் கையெழுத்திடும் அரசின் நடவடிக்கை முற்றிலும் சட்டத்துக்கு எதிரானது என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. தங்கள் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கவும் இதனுடன் தொடர்புடைய இதர ஒப்பந்தங்களையும் செயல்படுத்துவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவையும் மனுதாரர்கள் உயர்நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

மேலும், தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காக பிரதிவாதிகள் இரண்டு மில்லியன் ரூபா இழப்பீட்டை செலுத்த உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர்கள் மேலும் கோரியுள்ளனர்.

## ஜே.எம்.ஓ. அறிக்கை...

தற்கொலை செய்து கொண்ட மாணவியின் உளவியல் தொடர்பில் ஜே.எம்.ஓ. அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். ஜே.எம்.ஓ. எவ்வாறு உளவியல் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க முடியும்? இதனை எம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை என பொதுஜன பெரமுனவின் எம்.பியான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ‘அ’ அட்டவணையின் ஒழுங்குவிதிகளின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

‘‘பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளில் உளவியல் ரீதியான பாதிப்புகளினால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்யும் நிலை காணப்படுகின்றது. அண்மையில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பகிடிவதையால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டார். மக்கள் விடுதலை முன்னணிக்கு பகிடிவதை தொடர்பில் புதிதாக எதையும் குறிப்பிடத்தேவையில்லை. அவர்கள் பகிடிவதைகள் தொடர்பில் ஏனையவர்களுக்கு பாடம் கற்பிப்பார்கள். ஏனெனில், பல்கலைக்கழகங்களில் பகிடிவதையின் கர்த்தாக்கள் அவர்கள்தான்.

பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட விடயம் தற்போது பிரதான பேசுபொருளாகியுள்ளது. எமது சக எம்.பி. மனோகணேசன் அந்த மாணவி தொடர்பில் இங்கு பேசினார்.

அதற்கு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் பதிலளித்தார். இந்த மாணவியின் உளவியல் தொடர்பில் ஜே.எம்.ஓ. அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிட்டார். ஜே.எம்.ஓ. எவ்வாறு உளவியல் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்க முடியும்? இதனை எம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்தச் சம்பவத்துடன் தேசிய மக்கள் சக்தியின் வட்டார அமைப்பாளரின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. அவரைப் பாதுகாப்பதற்காக இந்த விவகாரத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தாமல் அலட்சியப்படுத்துகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இதனை அரசியலாக்க வேண்டிய தேவை எதிர்க்கட்சிகளுக்கு கிடையாது. உயிரிழந்த மாணவிக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுங்கள். அதனை விடுத்து பேசுபொருளாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தாதீர்கள்.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் கல்கிஸையில் 19 வயது இளைஞன் பகல் வேளையில் பிரதான வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறுகையில், இந்தஇளைஞனின் தாயார் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றார். அதனால்தான் இந்தக்கொலை இடம்பெற்றுள்ளது என்கின்றார். இவ்வாறு எப்படி கூற முடியும்? முறையான விசாரணைகள் நடந்ததன் பின்னரா இவர் இவ்வாறு குறிப்பிட்டார்?

தாய் போதைப்பொருள் வியாபாரி என்றால் அந்த இளைஞன் ஏன் இளம் வயதில் வீதிகளை கூட்டித்திரிய வேண்டும்? அவர் கோடீஸ்வரராக அல்லவா இருந்திருப்பார்? பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கருத்து இக்கொலையை நியாயப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. போதைப்பொருளுடன் தொடர்புபட்டிருந்தாலும் நடுவீதியில் வைத்து சுட்டுக்கொல்ல முடியுமா? தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாடம் கற்பிப்பதாக கூறிக்கொண்டு வந்தவர்களுக்கு இன்று தனிமனித பாதுகாப்பு தொடர்பில் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது’’ என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** பண வருவாய் திருப்திகரமாக அமையும், உடல் நோய்கள் தீரும். சோம்பலைத் தவிர்த்து முயற்சி செய்யுங்கள்.

**ரிஷபம்** வீணான மனக் கவலை வேண்டாம். எதிர்காலத் திட்டங்களை நல்ல முறையில் நடைமுறைப் படுத்த முயற்சி செய்யுங்கள்.

**மிதுனம்** எதையும் துணிவுடன் செய்ய மாட்டீர்கள், மற்றவர்களை நம்பு வதற்கு முன்னர் இரண்டு முறை யோசியுங்கள்.

**கடகம்** நினைத்த காரியத்தில் வெற்றி வாகை சூடுவீர்கள், குடும்பத்தில் தடைப்பட்டிருந்த மங்கள காரியங் கள் இன்று நடைபெறும்.

**சிம்மம்** பணம் பொருள் நட்டம் ஏற்படும் நாள், வீண் வாக்குவாதங்களால் வீண் தொல்லைகள். கோபத்தை அடக்கிக் கொள்க.

**கன்னி** மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம் தேவையற்ற பயணங்களை குறைத்துக் கொள்க.

**துலாம்** செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள், தேவை யற்ற பயணங்களால் தொல்லை உண்டு.

**விருச்சிகம்** நீங்கள் எதிர்ப்பார்த்த உதவிகள் உங்கள் நண்பர் மூலம் கிடைக்கும், போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும்.

**தனுசு** முயற்சித்த தொழில் வாய்ப்புகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்குவீர்கள்.

**மகரம்** தந்தையின் உடல் நிலையில் கவனம் வேண்டும், பொறுமை யோடு அனைத்தையும் கையாளுங் கள். கிட்டிய ஒருவரை இழக்க நேரி டும்.

**கும்பம்** பயணங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது, திடீர் கோபத் தால் மனதில் அமைதி இருக்காது. வீண் டென்ஷன் வேண்டாம்.

**மீனம்** தொழில்,வியாபார விடயத் தில் கவனம் வேண்டும். வீணாக மன தைப்போட்டுக் குழப்பிக்கொள்ளா தீர்கள். பொறுமை அவசியம்.

**திதி:** துவாதசி பி.ப.2.56 வரை பின் திரயோதசி
**நட்சத்திரம்:** அஸ்தம் பி.இ.12.09 வரை பின் சித்திரை

**பிறை:** வளர்பிறை
**யோகம்:** அமிர்த யோகம் பி. இ. 12.09 வரை பின் மரண யோகம்

**வார சூலை:** மேற்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது.

**நல்ல நேரம்:** காலை 5.54 – 8.54 மணி வரை காலை 9. 54 – 10.24 மணி வரை பகல்12.54 – 2.54 மணி வரை மாலை 4.54 – 5.54 மணி வரை
**ராகு காலம்:** 10.24 – 11.54 மணி வரை
**எமகண்டம்:** 2.54 – 4.24 மணி வரை

**குளிகை:** 7.24 – 8.54 மணி வரை

**சந்திராஷ்டமம்:** கும்ப ராசியினர் எச்சரிக் கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 12.09 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர் பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், பூரட்டாதி, ரேவதி
**இன்று பின்னிரவு 12.09 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி
**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர் களுக்கும் தொழில், வியாபார இலாபங் கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ் டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# வடக்கு, கிழக்கில் காணிகளை அபகரிக்கும் வர்த்தமானியின் உள்நோக்கம் என்ன?

## சபையில் கேள்வியெழுப்பினார் சிறீதரன் எம்.பி.



வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 5,700 ஏக்கருக்கும் அதிகமான தமிழர்களின் பூர்வீக நிலங்களை சுவீகரிப்பதற்காக 2025.03.28ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்னவென்பதை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த சபைக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் நடைபெற்ற சபை அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ் பாராளுமன்றக் குழுத் தலைவராக துறைசார் அமைச்சரிடம் வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைக்கும்போதே அவர் இவ்விடயம் குறித்து கேள்வியெழுப்பியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

குறித்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்பட்டுள்ள காணிகள் என்ன தேவைக்காகக் கோரப்பட்டுள்ளன என்பதையும் 5,700 ஏக்கர் வரையான காணிகளை அவசரமாக சுவீகரிப்பதற்கான காரணம் என்னவென்பதையும் அமைச்சர் இச்சபைக்கு அறிவிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலம் நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உறவினர் - நண்பர்களின் வீடுகளிலும் வாழும்போது அவர்களது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காமல் மக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்ன என்பதையும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நீண்டகால யுத்தம் காரணமாக அவர்களது காணி ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகங்கள் தெரிவிக்கும் நிலையில், இப்புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி உரிமையை உறுதிப்படுத்துமாறு எவ்வாறு கோர முடியும் என்பதையும் அமைச்சர் இந்த உயரிய சபைக்கு அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ், பாராளுமன்றக் குழுத் தலைவர்களால் கேட்கப்படும் வாய்மொழி மூல வினாக்களுக்கு துறைசார் அமைச்சர் உரிய காலத்துக்குள் பதிலளிக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

## விசாரணைக் குழு முன்னிலையில் ஆஜராக தென்னக்கோனுக்கு பணிப்பு

இடைநீக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனை மே மாதம் 19ஆம் திகதி விசாரணைக் குழுவின் முன் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

'பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோன் தனது பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ் பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு' முன்னிலையில் மே மாதம் 19ஆம் திகதி ஆஜராகுமாறு குறித்த குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைக் குழு பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் இதுவரை பல நாட்கள் கூடியிருந்ததுடன், எதிர்கால விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் தேசபந்து தென்னக்கோனை குழு முன்னிலையில் ஆஜராகுமாறு முதல் தடவையாக அறிவித்துள்ளது.

# வடக்கு மாகாணத்தில் எல்லாப் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம்

## இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயம் என்கிறார் அமைச்சர் சந்திரசேகர்



தேசிய மக்கள் சக்தி மீது தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை. மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். அரசியல் இருப்புக்காகவே தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாக சில குழுக்கள் போலிப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றன" - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

பொதுத்தேர்தலென்பது வேறு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலென்பது வேறு. எனவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளுடன்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முடிவை ஒப்பிட வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 தேர்தலில் வடக்கில் விரல்விட்டு எண்ணக்கூடிய வகையில்தான் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால், இம்முறை வடக்கில் எல்லாப் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயமாகும்.

எனினும், மக்களைப் பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல் வாதிகளுக்கு இதனைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதாக போலிப் பிரசாரத்தை முன்னெடுத்து இன்பம் காண்கின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மீதும் எம்மீதும் எமது அரசாங்கத்தின் மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால்தான் நிச்சயம் நிறைவேற்ற முடியுமென்பது அவர்களுக்குத் தெரியும். நிச்சயம் அதனைச் செய்வோம். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டு வருகின்றது.

எனவே, சதிகார அரசியல்வாதிகளால் எம்மையும் மக்களையும் பிரிக்க முடியாது. இலக்கை நோக்கிய எமது பயணம் தொடரும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அத்தனை சொந்தங்களுக்கும் நன்றி. அதேபோல வாக்களிக்காதவர்களுக்கும் எமது சேவைகள் தொடரும்" - என்றார்.

# புதிதாகப் பிறக்கும் 40 – 50 குழந்தைகளுக்கு தலசீமியா

## தொற்றாநோய்ப் பிரிவின் பணிப்பாளர் சமித்தி சமரக்கோன் தெரிவிப்பு

இலங்கையில் அதிகரித்துவரும் தலசீமியாவின் தாக்கம் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தலசீமியா நோயால் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இலட்சக்கணக்கானோர் தங்களை அறியாமலேயே இந்த நோய்க்கான மரபணுவை காவிச்செல்கின்றனர்.

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் புதிதாகப் பிறக்கும் 40 முதல் 50 குழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப்படுவதாக தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சமித்தி சமரக்கோன் தெரிவித்தார்.

உலக தலசீமியா தினத்தை முன்னிட்டு நேற்று (08) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தலசீமியா என்பது இரத்தத்தால் ஏற்படும் ஒரு பரம்பரை (மரபனு சார்ந்த) நோய்த்தாக்கமாகும். இது ஆரோக்கியமான சிவப்பு இரத்த அணுக்களை அதாவது, ஹீமோகுளோபின் உற்பத்தி செய்யும் உடலின் திறனைப் பாதிப்படையச் செய்கிறது.

இதனால் இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் பலவீனமடைந்து அழிந்துபோகின்றன. சிவப்பணுக்கள் இல்லையென்றால் உடலில் இரத்த ஓட்டம், உற்பத்தி என்று எல்லாமே பாதிக்கப்படும். குறிப்பாக, தீவிரமான இரத்த சோகை, மூச்சுத்திணறல் மற்றும் சீரற்ற இதயத் துடிப்பு ஆகிய பிரச்சினைகள் ஏற்படும்.

நாட்டில் சுமார் 5,00,000 பேர் இந்த நோய்த் தாக்கத்துக்கு காரணமான குறைபாடுள்ள மரபணுக்களில் ஒன்றின் காவிகள். இது இந்த நோய் குறித்த அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் தடுப்பதற்கான வழிகளின் அவசர தேவையை எடுத்துக்காட்டுகிறது.

உலக தலசீமியா தினம் இந்த ஆண்டு 'தலசீமியாவுக்காக ஒன்றிணைதல், சமூகங்களை ஒன்றிணைத்தல், நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்தல்' என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது.

## வெசாக் தினத்தையொட்டி விசேட ரயில் சேவைகள்

தேசிய வெசாக் தினத்தையொட்டி தூரப் பிரதேசங்களுக்கு மேலதிகமாக விசேட ரயில் சேவைகளை ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2025 மே 12 முதல் 13 வரை நுவரெலியாவில் நடைபெறும் தேசிய வெசாக் விழாவை முன்னிட்டு கொழும்பு கோட்டைக்கும் பதுளைக்குமிடையில் மேலதிக சிறப்பு ரயில் சேவையையும் கொழும்பு கோட்டையிலிருந்து அநுராதபுரத்துக்கு பயணிக்கும் பயணிகளுக்காக மேலதிக ரயில் சேவையையும் ஈடுபடுத்தவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த ரயில் சேவைகள் இன்று முதல் (09) எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை சேவையில் ஈடுபடத் திட்டமிடப்பட்டுள்ளது.

# வெசாக் தினத்தில் தன்சல் வழங்குவோர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுக

## சுகாதார அமைச்சு முக்கிய அறிவிப்பு

எதிர்வரும் வெசாக் மற்றும் பொசன் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்படும் தான சாலைகள் (உணவு தானம்) தொடர்பில் சுகாதார வழிமுறைகளுடனான பொதுவான அறிவுறுத்தல்களின் தொகுப்பை சுகாதார மற்றும் ஊடக அமைச்சு வெளியிட்டுள்ளது.

தானசாலைகள் இலங்கையில் மிகவும் மதிப்புமிக்க ஒரு பாரம்பரியமாகும். தானங்கள் குறிப்பாக, வெசாக், பொசன் மற்றும் பிற மத மற்றும் கலாசார நிகழ்வுகளின்போது வழங்கப்படுவது வழக்கமாகும்.

இந்த நாட்களில் அனைத்து மக்களுக்கும் இலவசமாக உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்காக பலர் தானம் வழங்கும் நிலையங்களை நிர்மாணித்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சமூக சேவை பரவலாகப் பாராட்டப்பட்டாலும் இது பொதுச் சுகாதார சவால்களுக்கு வழிவகுக்குமென்பதையும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, முக்கியமாக முறையற்ற உணவுத் தயாரிப்பு முறைகள், முறையற்ற சேமிப்பு மற்றும் சுகாதார நடைமுறைகள் இல்லாமல் உணவு தயாரிப்பதனூடாக நோய்கள் பரவும் அபாயம் ஏற்படுவது தொடர்பிலும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்க சரியான உணவு, சுகாதார நடைமுறைகள் அவசியமென்பதை உறுதி செய்வதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது.

எனவே, தானசாலைகளை ஏற்பாடு செய்யும் போது மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# வாழைச்சேனையில் மண் அகழ்வை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்

## எதிர்ப்புத் தெரிவித்த இருவர் கைதானதையடுத்து பெரும் பதற்றம்

*(கனகராசா சரவணன்)*

வாழைச்சேனை, கிண்ணியடி பிரதேசத்தில் மீன் வளர்க்கும் திட்டம் என்ற போர்வையில் பாரிய குழிகளைத் தோண்டி முன்னெடுக்கப்படும் மண் அகழ்வு நடவடிக்கையை எதிர்த்து பிரதேச மக்கள் மண்ணை ஏற்றிச் செல்லும் கனரக வாகனத்தை வழிமறித்து நேற்று (08) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து பொலிஸாருடன் பேசுவதற்குச் சென்ற தமிழரசுக் கட்சி வேட்பாளர் உட்பட இருவரைக் கைதுசெய்ததையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் பொலிஸாரின் அடாவடியை எதிர்த்து மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணியடி ஐஸ் உற்பத்தி நிலையத்துக்கருகாமையிலுள்ள தனியார் காணியொன்றில் 2021ஆம் ஆண்டு மீன் வளர்க்கும் திட்டத்தின் கீழ் பாரிய குழிகளைத் தோண்டி மண் அகழ்ந்து வெளியிடங்களுக்கு ஏற்றிச்சென்று விற்பனை செய்து வந்துள்ளனர்.

இதனைக் கண்டித்து கடந்த காலத்தில் கிராமத்து இளைஞர்களால் கண்டன ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுத்ததையடுத்து இத்திட்டம் இடை நிறுத்தப்பட்டது. இந்நிலையில், மீண்டும் கடந்த முதலாம் திகதி குழிகளைத் தோண்டி மண் அகழ்வில் ஈடுபட்டனர். அங்கு சென்ற கிராம மட்ட அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், மண் அழ்வில் ஈடுபட்டவர்கள் தற்போது தங்களிடம் அனுமதி உண்டு எனத் தெரிவித்து, பொலிஸாருக்கு தெரிவித்த முறைப்பாட்டையடுத்து, எதிர்ப்புத் தெரிவித்த இருவரை பொலிஸார் கைதுசெய்து அவர்களுக்கெதிராக வழக்குப் பதிவுசெய்து பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.





இது தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் பிரதேச செயலாளர், நில அளவை சுரங்கப் பணியகம் மற்றும் மாவட்ட நன்னீர் மீன் வளர்ப்பு அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற திணைக்களங்களுடன் விசேட கலந்துரையாடல் இடம்பெற்று அடுத்து வரும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் வரை இந்த மண் அகழ்வை இடைநிறுத்திவைக்க அதிகாரிகள் தீர்மானித்தனர். இருந்தபோதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கு கொட்டகை அமைத்து தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 மே 09 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பேச்சல்ல.. தேவை செயல்!

ஊடகக் கண்காட்சியை நடத்துவதனூடாக எப்போதும் நாட்டை ஆழமுடியுமெனக் கருதியிருந்தால் அது முற்றிலும் தவறானதாகும். இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் அடுத்தடுத்து தோல்வி கண்டிருக்கும் நிலையில், மீண்டுமொரு தோல்வியடைந்த அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்குத் திராணியில்லை. எனவே, தற்போதைய அரசாங்கம் சிறப்பாக செயற்படவேண்டுமாயின் அவர்கள் பேசுவதைக் குறைத்து, அதனைச் செயலில் காண்பிக்கவேண்டுமென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளமை தொடர்பில் எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தி தெற்கில் வெற்றிபெற்றிருந்தாலும் பல சபைகளில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மையைப் பெறத்தவறியிருக்கிறது. இந்நிலையில், தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அலி சப்ரி, அப்பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஊடகக் கண்காட்சியை நடத்துவதனூடாக எப்போதும் நாட்டை ஆழமுடியுமென நீங்கள் கருதியிருந்தால் அது முற்றிலும் தவறானதாகும். நீங்கள் கூறும் விடயங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதனூடாக வீதிகளில் இருக்கும் மக்களால் உணரக்கூடிய மாற்றத்தை உருவாக்குங்கள். சாதாரண மக்கள் மெச்சக்கூடியவகையில் சட்டம், ஒழுங்கு, செயற்றிறன்மிக்க பொது நிர்வாகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை நிலைநிறுத்துங்கள்.

காலவோட்டத்தில் மக்கள் கடந்த காலத்தைப் பற்றிய பேச்சுகளில் ஆர்வம் இழப்பார்கள். அவர்கள் கடந்த கால அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் மகிழ்ச்சியடையவில்லை என்பதனாலேயே தற்போதைய அரசாங்கம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அன்றேல், இதுவும் வெறுமனே நல்லாட்சி அரசாங்கம் - 2 ஆக மாறிவிடும்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் ஓர் அபாய எச்சரிக்கையாகும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ 18 மாதங்களில் பதவியை இராஜிநாமாச் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் அடுத்தடுத்து தோல்வி கண்டிருக்கும் நிலையில், மீண்டுமொரு தோல்வியடைந்த அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்குத் திராணியில்லை. எனவே, தற்போதைய அரசாங்கம் சிறப்பாக செயற்படவேண்டுமாயின், அவர்கள் பேசுவதைக் குறைத்து அதனைச் செயலில் காண்பிக்கவேண்டும். நாமனைவரும் தேர்தல்களில் அரசியல் செய்வோம். இருப்பினும், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்''- எனக் குறிப்பிட்டுள்ளார் அலி சப்ரி .

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் சப்ரியின் கருத்துகளில் நியாயமொன்று இழையோடுவதை உணர முடிகிறது. தற்போதைய அரசாங்கம் வெறும் வாய்ப்பேச்சை விடுத்துவிட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளில் இறங்கவேண்டுமென்ற கருத்து மிக முக்கியமானது.

தேசிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின்போது பகிரங்கமாகக் கூறிய எதுவும் உருப்படியாக நடக்கவில்லை. அதனால்தான் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்களினால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாமல் போனது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர் விடயம் தொடக்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் பற்றிய ஜனாதிபதியின் உத்தரவாதம்வரை எதுவுமே மக்கள் நம்பக்கூடியதாக இருக்கவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் இருந்த மக்களின் ஆகர்ஷணம் உள்ளூராட்சித் தேர்தலில் இல்லாதிருந்த காரணத்தால்தான் ஜனாதிபதியே நேரடியாக தேர்தல் பிரசாரங்களில் இறங்க வேண்டிய நிலைமை இருந்தது.

கோட்டா அரசு விரட்டப்பட்டமைக்குப் பின்னால் இருந்த காரணங்கள் என்ன, நல்லாட்சி அரசு பின்னடைவைச் சந்திக்கக் காரணங்கள் என்ன என்றெல்லாம் கடந்தகால பட்டறிவைக் கொண்டு சிந்தித்து செயற்பட்டால் இந்த ஆட்சியை சிறந்த முறையில் முன்னெடுக்கலாம். தவறான ஆலோசகர்கள், தவறான தீர்மானங்கள், பௌத்தமயமான சிந்தனை, சிறுபான்மையினர் புறக்கணிப்பு, முறையற்ற பொருளாதார நிர்வாகம், இலஞ்ச, ஊழல், மோசடி என்பவற்றில் அரசாங்கம் கவனஞ்செலுத்த வேண்டும்.

அலி சப்ரி கூறுவதுபோல தேர்தல் முடிந்துவிட்டதால் தேர்தல் கால அரசியலை மறந்துவிட்டு இனி நாட்டுக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும். நாட்டுக்கான அரசியலைச் செய்வதாயின் இந்த ஆட்சியாளர் இனியும் அரசியல் ரீதியான பேச்சுகளை நிறுத்தவேண்டும். தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மட்டுமே சிறந்தவர்கள், மற்றவர்கள் எல்லோரும் ஊழல்வாதிகள் என்ற அடிப்படையில் சிந்தித்தால் இந்த அரசுக்கு எவரும் ஆதரவளிக்கப்போவதில்லை.

இந்த ஆட்சியும் கடந்தகால ஆட்சிகளைப் போல இடை நடுவில் குழம்பிவிடக் கூடாது. ஏனெனில், அதனால் ஏற்படும் பாதிப்புகள் நாட்டையும் சாதாரண மக்களையும் பாதிக்கும். அந்த அடிப்படையில் இந்த ஆட்சி நீடித்து நிலையாகச் செயற்படவேண்டுமானால் தேசிய மக்கள் சக்தி தனது எதிர்க்கட்சி, இடதுசாரி மனநிலையை மாற்றவேண்டும். வெறும் வாய்ப்பேச்சால் ஆட்சியை முன்னெடுக்க முடியாது. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பதுபோல வெறும் வாய்ப்பேச்சு நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவாது. செயலே தேவை.




# இந்தியா-பாகிஸ்தான் மோதல்

# பின்வாங்க முடியாத அளவுக்கு முற்றிவிட்டதா?

## 4 முக்கிய கேள்விகள்



பாகிஸ்தான் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ள காஷ்மீர் பகுதிகளில் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மீது 'ஆபரேஷன் சிந்தூர்' என்கிற பெயரில் தாக்குதலை நடத்தியுள்ளதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது. நம்பகமான உளவுத் தகவல்களின் அடிப்படையில் சுமார் ஒன்பது இடங்களில் ஏவுகணை மற்றும் வான்வெளித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்திய நேரப்படி (மே 07) நள்ளிரவு 1.05இல் இருந்து 1.30 வரை சுமார் 25 நிமிடங்கள் மட்டுமே நடைபெற்ற அந்தத் தாக்குதல் அந்தப் பகுதி முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. குண்டுவெடிப்பின் பெரும் சத்தம் அங்கு வசிப்பவர்களை தூக்கத்திலிருந்து அலறி எழ வைத்தது.

பாகிஸ்தானோ, ஆறு இடங்கள் மட்டுமே தாக்கப்பட்டதெனவும் இந்திய போர் விமானங்கள் ஐந்தையும் ட்ரோன் ஒன்றையும் தாங்கள் சுட்டு வீழ்த்தியதாகவும் கூறியுள்ளது. இந்தக் கூற்றை இந்தியா இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொதுவான எல்லையாக இருக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி வந்து இந்தியா வான்வெளித் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் கொல்லப்பட்டனரெனவும் 46 பேர் காயமடைந்தனரெனவும் பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

அதேநேரம், இந்திய பகுதியில் எல்லை தாண்டி பாகிஸ்தான் நடத்திய குண்டுவீச்சில் பொதுமக்கள் பத்துப்பேர் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த மாதம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்ட பிறகு அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் இந்த இரண்டு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் ஆபத்தான அளவில் அதிகரித்து இந்த நிலையை அடைந்துள்ளது.

பாகிஸ்தானை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் தீவிரவாதிகள் மற்றும் பிற வெளிநாட்டுச் சக்திகள் சேர்ந்துதான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளன என்பதற்குத் தங்களிடம் தெளிவான ஆதாரம் இருப்பதாக இந்தியா தெரிவித்தது. இதை பாகிஸ்தான் மறுத்துள்ளது. அத்தோடு, இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரத்தையும் இந்தியா சமர்ப்பிக்கவில்லையென்றும் பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2016இல் உரியில் 19 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட பிறகு எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி இந்தியா, துல்லியத் தாக்குதல்களை நடத்தியது.

புல்வாமா வெடிகுண்டுத் தாக்குதலில் 2019ஆம் ஆண்டு 40 இந்திய துணை இராணுவப் படை வீரர்கள் கொல்லப்பட்ட பிறகு பாலகோட் பகுதியினுள்ளே சென்று வான்வெளித் தாக்குதல் நடத்தி வந்தது இந்தியா. 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தானுக்குள் சென்று இந்தியா தாக்கியது அதுவே முதல் தடவை. இது அடுத்தடுத்த பழிவாங்கும் தாக்குதல்களுக்கும் வான்வழியில் போர் விமானங்களுக்கிடையிலான சண்டைகளுக்கும் வழிவகுத்தது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதற்காக ஒரே நேரத்தில் பாகிஸ்தானை தலைமையகமாகக் கொண்ட மூன்று தீவிரவாதக் குழுக்களின் உட்கட்டமைப்புகள் மீது இந்தியா குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது. இதனடிப்படையில் இந்தத் தாக்குதல் தனித்துத் தெரிவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பாகிஸ்தான் மற்றும் அதன் நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீர் பகுதியில் நுழைந்து லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முஹமது, ஹிஸ்புல் முஜாஹிதீன் ஆகியவற்றின் முக்கிய மையங்கள் உள்ளிட்ட ஒன்பது தீவிரவாத இலக்குகளைத் தாக்கியதாக இந்தியா குறிப்பிடுகிறது.

இவற்றில் சியால்கோட்டில் இருந்த இரண்டு முகாம்கள், மிக அருகில், அதாவது, இந்திய எல்லைக் கோட்டிலிருந்து 6 – 18 கி.மீ. தொலைவிலேயே இருந்ததாக இந்திய செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

மிக அதிக தூரம் சென்று தாக்கியதென்றால் பாகிஸ்தானுக்குள் சுமார் 100 கி.மீ. தூரம் தள்ளியிருந்த பஹாவல்பூரில் உள்ள ஜெய்ஷ்-இ-முஹமது தலைமையகத்தின் மேல் நடத்திய தாக்குதல்தான் என்று கூறியுள்ளது இந்தியா. எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து 30 கி.மீ. தூரத்திலிருக்கும் பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரின் தலைநகரான முசாஃபராபாத்தில் உள்ள லஷ்கர்-இ-தொய்பா முகாம், பஹல்காமில் நடந்த தாக்குதலோடு சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறினார் அந்த செய்தித் தொடர்பாளர்.

ஆறு இடங்கள் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறது பாகிஸ்தான். ஆனால், அந்த இடங்களில் தீவிரவாத முகாம்கள் இருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.

"கடந்த கால வகைமைகளுக்கப்பால் இந்தியாவின் இலக்குகள் விரிவடைந்துள்ளதுதான் இந்தத் தடவை குறிப்பிடத்தக்க விஷயம். இதற்கு முன்னால் தாக்குதல் நடத்தப்பட்ட பாலகோட் போன்றவை எல்லைக் கோட்டைத் தாண்டி, இராணுவமயமாக்கப்பட்ட எல்லையில் பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில் நிகழ்த்தப்பட்டவை" - என்று பிபிசியிடம் குறிப்பிட்டார் டில்லியைச் சேர்ந்த வரலாற்றாசிரியர் ஸ்ரீநாத் ராகவன்.

மேலும், "ஆனால் இந்தத் தடவை சர்வதேச எல்லைப் பகுதியைத் தாண்டி பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் வரை சென்று அங்கு தீவிரவாத முகாம்களின் தலைமையகங்கள், உட்கட்டமைப்புகள் போன்றவற்றையும் அங்கு லஷ்கர்–இ-தொய்பாவுடன் தொடர்புடையதாக அறியப்பட்ட இடங்களான பஹாவல்பூர் மற்றும் முரிட்கே பகுதிகள் வரை சென்று தாக்குதல் நடத்தியுள்ளது".

"அத்தோடு ஜெய்ஷ்-இ-முஹமது மற்றும் ஹிஸ்புல் முஜாஹிதீனின் சொத்துகளையும் தாக்கியுள்ளனர். இது நிலவியல் அரசியல் ரீதியாக விரிவான பதிலைக் குறிக்கிறது. இந்தியாவுக்குப் பல குழுக்கள் பிரச்சினை கொடுத்து வருகின்றன என்று குறிப்பிடும் அதே வேளை, ஒரு விரிவான தகவலையும் சொல்வதைப் போல் உள்ளது" - என்று ராகவன் குறிப்பிட்டார்.

இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லை என்பது குஜராத்திலிருந்து ஜம்மு வரை நீண்டிருக்கும் இரு நாடுகளையும் பிரிக்கும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லை.

பாகிஸ்தானுக்கான இந்திய தூதராக இருந்த அஜய் பிஸரியா பிபிசியிடம் பேசியபோது, "இந்தியா செய்தது பாலகோட்டில் செய்த நடவடிக்கையைப் போலவும் அத்துடன் சேர்த்து தடுப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்தவும் அறியப்பட்ட தீவிரவாத மையங்களைக் குறிவைப்பதோடு, பதற்றத்தைக் குறைக்கும் செய்தியையும் தெரிவிப்பதாகும்" - என்றார்.

"இவை கடந்த காலத்தைவிட மிகத் துல்லியமாகக் குறிவைத்து, வெளிப்படையாக நடந்துள்ளன. இதை பாகிஸ்தானால் மறுக்க முடியாது"- என்று கூறினார் பிஸரியா.

'தடுப்பு நடவடிக்கைகளை மீண்டும் நிலைநிறுத்தும் நோக்கில்' இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இந்திய தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ''2019இல் நடந்த தடுப்பு நடவடிக்கைகளின் வலிமை குறைந்துவிட்டதாகவும் அவற்றை மறு உருவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகவும் இந்திய அரசாங்கம் நினைக்கிறது"- என்கிறார் பேராசிரியர் ராகவன்.

"தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து, குறிப்பிட்ட கால இடைவெளியில், தாக்குதல்கள் நடத்த வேண்டும் என்ற இஸ்ரேலின் கொள்கையைப் பிரதிபலிப்பதாக இது இருக்கிறது. ஆனால், திருப்பி அடித்தால் மட்டும்தான் தீவிரவாதத்தைத் தடுக்க முடியுமென்று நாம் முடிவு செய்தால், பாகிஸ்தானும் பதிலடி கொடுப்பதற்கான ஆபத்து இதில் இருக்கிறது. பிறகு நிலைமை கையிலடங்காமல் போய்விடும்" - என்கிறார்.

### இது இன்னும் பெரிய மோதலாக மாறுமா?

பாகிஸ்தானிடமிருந்து பதில் தாக்குதல் நடப்பது தவிர்க்க முடியாததென்றும் அதன் பிறகு ராஜ்ஜீய வழிமுறைகள் செயற்படுத்தப்படுமென்றும் பெரும்பாலான நிபுணர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

"பாகிஸ்தானிடமிருந்து கண்டிப்பாக எதிர்வினை வரும். பதற்றம் அடுத்த நிலைக்குச் செல்வதைக் கட்டுப்படுத்துவதுதான் நம் முன்பாக இருக்கும் சவால். அப்போது ராஜ்ஜீய நடவடிக்கைகள்தான் கைகொடுக்கும்" - என்கிறார் பிஸரியா.

"பொறுமை காக்கும்படி பாகிஸ்தானுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும். ஆனால், ராஜ்ஜீய நடவடிக்கையின் முக்கிய குறிக்கோள் பாகிஸ்தானின் எதிர்வினைக்குப் பிறகு இந்தப் பிரச்சினை அதிகரிக்காமல் இரு நாடுகளும் பார்த்துக்கொள்வதுதான்" - என்றும் அவர் கூறுகிறார்.

லாகூரைச் சேர்ந்த இராணுவ மற்றும் அரசியல் ஆய்வாளரான இஜாஸ் ஹுசைன் போன்ற பாகிஸ்தானைச் சேர்ந்த நிபுணர்கள், முரிட்கே, பஹாவல்பூர் போன்ற பகுதிகளில் இந்தியா நடத்திய துல்லியத் தாக்குதல், "நிலவும் பதற்றத்தைக் கருத்திற்கொண்டு, ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது தான்" - என்கிறார்கள்.

பதில் தாக்குதல்களும் நடக்க வாய்ப்பிருக்கிறது என்று நம்புகிறார் முனைவர் ஹுசைன்.

"பாகிஸ்தான் இராணுவத்தினூடக பேச்சுத்திறன் மற்றும் உடனடியாகப் பதிலடி கொடுக்கும் எண்ணம் ஆகியவற்றைப் பார்த்தால் எல்லை தாண்டிய துல்லியத் தாக்குதல்கள் வரும் நாட்களில் நடக்கலாம் என்றுதான் தோன்றுகிறது" - என்று பிபிசியிடம் தெரிவித்தார் அவர்.

ஆனால், இப்படி இரு தரப்புகளும் மாறி மாறி துல்லியத் தாக்குதல்கள் நடத்தி இதை ஒரு வழக்கமான போராக மாற்றிவிடக்கூடாதென்று கவலைப்படுகிறார் முனைவர் ஹுசைன்.

இந்திய வான்வெளித் தாக்குதல், பாகிஸ்தானின் எதிர்வினை, ஜம்மு காஷ்மீர், தெற்காசியா அமெரிக்காவில் இருக்கும் அல்பெனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரிஸ்டோபர் க்ளாரி, இந்தியா தாக்குதல் நடத்தியிருக்கும் அளவையும் தாக்குதல் நடந்த இடங்களில் கண்ணுக்குத் தெரியும் பாதிப்பையும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையையும் வைத்துப் பார்த்தால் பாகிஸ்தான் பதில் தாக்குதல் நடத்துவது உறுதியென்றே தான் நம்புவதாகக் குறிப்பிடுகிறார்.

"அப்படிச் செய்யாமல் இருந்தால் இந்திய அரசுக்குக் கோபம் வரும் போதெல்லாம் தன் மீது தாக்குதல் நடந்த இந்தியாவுக்கு பாகிஸ்தான் அனுமதி கொடுத்ததைப் போல் ஆகிவிடும். அத்துடன், பதிலுக்குப் பதில் கொடுக்கும் பாகிஸ்தான் இராணுவத்தின் செயற்பாடுகளோடும் பொருந்தாமல் போய்விடும்" - என்று பிபிசியிடம் தெரிவித்தார் தெற்காசிய அரசியலை உற்றுக் கவனிக்கும் க்ளாரி.

"இந்தியாவில் நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய குழுக்கள் மற்றும் அவற்றின் தளங்கள் மீது மட்டும் இந்தியா தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிடுவதால் பாகிஸ்தான் இந்தியாவின் இராணுவத் தளங்கள் மீது மட்டும் தாக்குதல் நடத்துவதோடு நிறுத்திக்கொள்ளும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், இதை உறுதியாகச் சொல்ல முடியாது" - என்றார் அவர்.

பதற்றம் அதிகரித்து வந்தாலும் நிலைமை சரியாகுமென்ற நம்பிக்கையில் சில நிபுணர்கள் இருக்கிறார்கள்.

"இன்னொரு பதில் தாக்குதல் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் அருகே சில காலம் அதிகரிக்கும் துப்பாக்கிச் சூட்டுடன் இந்தப் பிரச்சினையிலிருந்து நாம் தப்பிக்கும் வாய்ப்பும் இருக்கிறது" - என்று சொன்னார் க்ளாரி.

இருந்தாலும், இந்தப் பிரச்சினை அதிகரிப்பதற்கான ஆபத்து நிறையவே இருப்பதாகவும் 2002க்குப் பிறகு இந்தியா - பாகிஸ்தானிடையே 2016, 2019 பிரச்சினைகளை விடவும் அதிக ஆபத்தைக் கொடுக்கக்கூடிய பிரச்சினையாக இது இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவின் தாக்குதலுக்கு முன்பு பாகிஸ்தானில் போர் குறித்த அதீத ஆர்வம் இல்லையென்றாலும் நிலைமை விரைவில் மாறக்கூடும் என்று அந்நாட்டில் உள்ள நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

"நாட்டின் மிகவும் பிரபலமான அரசியல் தலைவர் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், அரசியல் சமூகம் என்பது பிளவுபட்டுள்ளது. இம்ரான் கானின் சிறைவாசம் இராணுவத்துக்கு எதிரான வலுவான எதிர்ப்பை பொதுமக்களிடையே தூண்டியது" - என்று இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த ஆய்வாளரும் ஜேன்ஸ் டிஃபென்ஸ் வீக்லி இதழின் முன்னாள் பத்திரிகையாளருமான உமர் ஃபரூக் கூறுகிறார்.

"கடந்த 2016 அல்லது 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இன்று பாகிஸ்தான் பொதுமக்கள் இராணுவத்தை ஆதரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. போர் குறித்த அதீத ஆர்வம் என்பது குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. ஆனால், இந்திய எதிர்ப்பு உணர்வுகள் அதிகமாக இருக்கும் மத்திய பஞ்சாபில் பொதுமக்களின் எண்ணம் மாறினால் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள பாகிஸ்தான் இராணுவத்தின் மீதான பொதுமக்களின் அழுத்தம் அதிகரிப்பதை நாம் காணக்கூடும். மேலும் இந்த மோதலால் இராணுவம் மீண்டும் பிரபலமடையும்"- என்கிறார்.

முனைவர் ஹுசைனும் இதே போன்ற கருத்தைத் தெரிவிக்கிறார்.

"இந்தியாவுடனான தற்போதைய மோதல், பாகிஸ்தான் இராணுவம் பொது மக்களின் ஆதரவை குறிப்பாக, நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து மீண்டும் பெறுவதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதாக நான் நம்புகிறேன். அவர்கள்தான் சமீபத்தில் அரசியல் தலையீட்டுக்காக பாகிஸ்தான் இராணுவத்தை விமர்சித்தனர்" - என்று அவர் கூறுகிறார்.

தொடர்ந்து பேசிய முனைவர் ஹுசைன், "இராணுவத்தின் தீவிரமான பாதுகாப்பு நிலைப்பாடென்பது ஏற்கனவே பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஊதிப் பெரிதுபடுத்தப்படுகிறது. சில ஊடகங்கள் ஆறு அல்லது ஏழு இந்திய ஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறுகின்றன.

இந்தக் கூற்றுகளைச் சரி பார்க்க வேண்டிய அவசியம் இருந்தாலும், அந்நிய அச்சுறுத்தல் நிலவும் காலங்களில் தேசிய பாதுகாப்புக் குறித்த விவரிப்புகளை ஆதரிக்கும் பிரிவினரிடையே இராணுவத்தின் பிம்பத்தை வலுப்படுத்த அவை உதவுகின்றன" - என்கிறார்.

இந்தியா மீண்டும் ஒருமுறை பதற்றம் அதிகரிப்பதற்கும் கட்டுப்பாட்டைப் பேணுவதற்குமிடையிலான ஒரு குறுகலான பாதையில் பயணிக்கிறது.

பஹல்காமில் நடந்த தாக்குதலுக்குப் பிறகு இந்தியா தனது பிரதான எல்லையை மூடி நீர்ப் பகிர்வு ஒப்பந்தத்தை நிறுத்தி தூதர்களை வெளியேற்றி பாகிஸ்தானியர்களுக்கான பெரும்பாலான விசாக்களை நிறுத்தி வைத்து விரைவாகப் பதிலடி கொடுத்தது.

இரு தரப்பு துருப்புகளுக்குமிடையே சிறிய ஆயுதத் தாக்குதல்கள் நடந்தன. இந்திய விமான நிறுவனங்களுக்கு பாகிஸ்தானின் வான்வெளியை மூடுவது என்ற அந்நாட்டின் முடிவைத் தொடர்ந்து இந்தியாவும் அதேபோன்ற தடையை விதித்து, பாகிஸ்தானிலிருந்து வரும் விமானங்களுக்குத் தனது வான்வெளியை மூடியது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, '1972ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தத்தை' நிறுத்தி வைப்பதாக பாகிஸ்தான் அறிவித்தது. 2019 புல்வாமா தாக்குதலுக்குப் பிறகு, மிகவும் விரும்பப்படும் நாடு என்ற பாகிஸ்தானின் அந்தஸ்தை உடனடியாக இரத்துச் செய்து, அதிக வரிகளை விதித்து, முக்கிய வர்த்தக மற்றும் போக்குவரத்து இணைப்புகளை நிறுத்தி வைத்த இந்தியாவின் நடவடிக்கைகளை இது பிரதிபலிக்கிறது.

அப்போது பாலகோட் மீது விமானப்படைத் தாக்குதல்களை இந்தியா நடத்தியதும் அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் விமானப்படை பதில் தாக்குதல்கள் நடத்தியதும் இந்திய விமானி அபிநந்தன் வர்தமான் கைது செய்யப்பட்டதும் பதற்றங்களை மேலும் அதிகரித்தன. இருப்பினும், இறுதியில் இராஜதந்திர வழிமுறைகள் பதற்றத்தைத் தணித்தன. நல்லுறவின் அடையாளமாக விமானி அபிநந்தனை பாகிஸ்தான் விடுவித்தது.

*- இது பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு.*

## நக்கல் நமசிவாயம்

*அரசியல்வாதிகள் தெளிவாக இருக்கிறாங்களோ இல்லையோ..மக்கள் தெளிவாக இருக்கிறாங்க பாருங்கோ...எலெக்சன் ரிஸல்ட்ஸ் அதைத்தான் காட்டுது...*



# இன்றைய நாளில்...

- 1612 – கண்டி மன்னர் செனரத்துடன் மார்செலஸ் சு டி பொசோடர் தலைமையிலான டச்சுத் தூதுக்குழு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- 1874 – குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி மும்பை நகரில் (அன்றைய பம்பாய்) அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1919 – இலங்கையில் முதன்முதலாக உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. அரிசிப் பயன்பாடு மாதமொன்றுக்கு சராசரியாக 30 ஆயிரம் தொன்னிலிருந்து 20 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது .
- 1933 – மகாத்மா காந்தி தனது சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.
- 1985 – காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

### அக்மீமன பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 18,942 | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 7,551 | 5 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 3,878 | 3 |
| சுயேச்சைக் குழு 02 | வாக்குகளின் எண்ணிக்கை 3,107 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 1,361 | 1 |
| சுயேச்சைக் குழு 03 | வாக்குகளின் எண்ணிக்கை 1,327 | 1 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 908 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 38,283 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 744 | |

## கண்டி மாவட்டம்

### வத்தேகம நகர சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 2,028 | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 1,289 | 4 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 499 | 2 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 359 | 1 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 324 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 4,592 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 126 | |

### கடுகன்னாவ நகர சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 2,726 | 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 1,583 | 4 |
| சுயேச்சைக் குழு 02 | வாக்குகளின் எண்ணிக்கை 631 | 1 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 583 | 1 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 470 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 343 | 1 |
| சுயேச்சைக் குழு 01 | வாக்குகளின் எண்ணிக்கை 323 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 6,996 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 213 | |

### பஸ்பாகே கோரளே பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 11,946 | 10 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 3,764 | 3 |
| சுயேச்சைக் குழு 01 | வாக்குகளின் எண்ணிக்கை 3,473 | 3 |
| சுயேச்சைக் குழு 02 | வாக்குகளின் எண்ணிக்கை 2,271 | 2 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 946 | 1 |

| | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 911 | 1 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 846 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 25,805 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 955 | |

### உடபலாத்த பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 19,595 | 18 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 15,326 | 11 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 7,854 | 6 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 5,692 | 4 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 3,384 | 3 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 2,819 | 2 |
| சுயேச்சைக் குழு | வாக்குகளின் எண்ணிக்கை 1,547 | 1 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | வாக்குகளின் எண்ணிக்கை 1,089 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 58,210 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,157 | |

### யட்டிநுவர பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 22,294 | 23 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 10,341 | 9 |
| சுயேச்சைக் குழு | வாக்குகளின் எண்ணிக்கை 4,535 | 4 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 3,690 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 2,469 | 2 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 2,383 | 2 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,396 | 1 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 1,104 | 1 |
| ஐக்கிய குடியரசு முன்னணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,075 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 49,623 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,513 | |

### உடதும்பர பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 4,945 | 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 4,925 | 6 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 1,320 | 1 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 1,002 | 1 |
| சுயேச்சைக் குழு | வாக்குகளின் எண்ணிக்கை 655 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 639 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 13,486 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 301 | |

### பாத்ததும்பர பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 20,429 | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 10,824 | 8 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 4,860 | 4 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | வாக்குகளின் எண்ணிக்கை 1,745 | 1 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 1,324 | 1 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 998 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 40,587 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 934 | |

### நவலப்பிட்டிய நகர சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 2,217 | 5 |
| சுயேச்சைக் குழு-02 | வாக்குகளின் எண்ணிக்கை 1,966 | 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 1,051 | 2 |
| சுயேச்சைக் குழு-01 | வாக்குகளின் எண்ணிக்கை 860 | 2 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 340 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 6,812 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 147 | |

### ஹரிஸ்பத்துவ பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 23,288 | 20 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 10,288 | 8 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 3,675 | 3 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 3,330 | 3 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,974 | 1 |
| ஐக்கிய குடியரசு முன்னணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,161 | 1 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 888 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 44,944 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,293 | |

### தும்பனே பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 17,530 | 17 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 8,361 | 7 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 2,994 | 2 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 1,883 | 2 |
| ஐக்கிய சுதந்திர முன்னணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,826 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 1,419 | 1 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,054 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 35,669 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 900 |

### கம்பளை நகர சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 8,229 | 11 |
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 7,749 | 10 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 2,871 | 4 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,462 | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 572 | 1 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 546 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 21,616 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 492 | |

### மெததும்பர பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 14,254 | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 7,966 | 8 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 2,382 | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 2,352 | 2 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 2,132 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 1,249 | 1 |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | வாக்குகளின் எண்ணிக்கை 1,023 | 1 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 799 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 32,505 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 973 | |

### கண்டி மாநகர சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 21,566 | 24 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 12,906 | 11 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 6,257 | 6 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 1,836 | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 1,497 | 1 |
| ஐக்கிய தேசிய முன்னணி | வாக்குகளின் எண்ணிக்கை 999 | 1 |
| சுயேச்சைக் குழு -02 | வாக்குகளின் எண்ணிக்கை 810 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 46,499 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,059 | |

### குண்டசாலை பிரதேச சபை

| கட்சிகள் | | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 34,363 | 24 |
| ஐக்கிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 14,397 | 9 |
| ஐக்கிய தேசியக் கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 4,051 | 3 |

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2025

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 3,995 | 2 |
| சுயேச்சைக் குழு | வாக்குகளின் எண்ணிக்கை 3,488 | 2 |
| மக்கள் கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 3,140 | 2 |
| சர்வஜன அதிகாரம் | வாக்குகளின் எண்ணிக்கை 3,132 | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | 66,566 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,678 | |

### பூஜாப்பிட்டிய பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 15,524 | 15 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,633 | 8 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,254 | 2 |
| மக்கள் கூட்டணி | 1,868 | 2 |
| சுயேச்சைக்குழு | 1,156 | 1 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | 1,094 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 31,137 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 749 | |

### பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 19,364 | 18 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 14,090 | 12 |
| மக்கள் கூட்டணி | 4,106 | 3 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,524 | 3 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,231 | 3 |
| சர்வஜன அதிகாரம் | 2,404 | 2 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | 1,441 | 1 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 928 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 49,088 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,488 | |

### மினிப்பே பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 12,742 | 11 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,858 | 6 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,409 | 3 |
| சுயேச்சைக்குழு | 1,877 | 1 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | 1,176 | 1 |
| சர்வஜன அதிகாரம் | 749 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 28,256 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 487 | |

### அக்குறணை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 14,638 | 13 |

| | | |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | வாக்குகளின் எண்ணிக்கை 11,492 | 10 |
| சுயேச்சைக்குழு- 02 | வாக்குகளின் எண்ணிக்கை 1,982 | 2 |
| ஐக்கிய தேசிய கட்சி | வாக்குகளின் எண்ணிக்கை 1,756 | 1 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | வாக்குகளின் எண்ணிக்கை 1,416 | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | வாக்குகளின் எண்ணிக்கை 1,365 | 1 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | வாக்குகளின் எண்ணிக்கை 909 | 1 |
| சுயேச்சைக்குழு- 01 | வாக்குகளின் எண்ணிக்கை 864 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 35,015 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 728 | |

### கங்கவட்ட கோரளே பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 14,767 | 13 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,222 | 5 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 2,440 | 2 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2,063 | 2 |
| சர்வஜன அதிகாரம் | 1,884 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 28,118 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 849 | |

### பன்வில பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | 4,931 | 6 |
| தேசிய மக்கள் சக்தி | 4,679 | 5 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 2,108 | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 955 | 1 |
| மக்கள் கூட்டணி | 852 | 1 |
| சர்வஜன அதிகாரம் | 800 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 14,380 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 569 | |

### கங்க இஹல கோரளே பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 14,478 | 13 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,292 | 5 |
| சுயேச்சைக்குழு 01 | 4,784 | 3 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 1,784 | 1 |
| சர்வஜன அதிகாரம் | 1,425 | 1 |
| சுயேச்சைக்குழு 02 | 725 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 29,897 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,110 | |

### உடுநுவர பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 26,001 | 18 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 15,312 | 10 |
| ஐக்கிய தேசிய கூட்டணி | 4,465 | 3 |
| ஐக்கிய தேசிய கட்சி | 3,889 | 3 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,242 | 2 |
| சுயேச்சைக்குழு | 2,301 | 2 |
| செல்லுபடியான வாக்குகள் | 56,813 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,498 | |

## கேகாலை மாவட்டம்

### கேகாலை மாநகர சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 5,004 | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,444 | 3 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,147 | 3 |
| சுயேச்சைக்குழு | 613 | 1 |
| ஐக்கிய தேசிய கட்சி | 375 | 1 |
| மக்கள் போராட்ட முன்னணி | 272 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 9,137 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 187 | |

### ருவன்வெல்ல பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 15,245 | 17 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 9,328 | 8 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,230 | 3 |
| சுயேச்சைக்குழு | 1,623 | 1 |
| ஐக்கிய தேசிய கட்சி | 1,448 | 1 |
| மக்கள் கூட்டணி | 939 | 1 |
| சர்வஜன அதிகாரம் | 674 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 33,286 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 730 | |

### புலத்கொஹுபிட்டிய பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,370 | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,106 | 5 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 3,391 | 3 |
| சர்வஜன அதிகாரம் | 2,320 | 2 |
| மக்கள் கூட்டணி | 976 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 24,531 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 618 |

### வரக்காப்பொல பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 29,928 | 25 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 13,808 | 9 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 6,595 | 5 |
| மக்கள் கூட்டணி | 3,872 | 3 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2,633 | 2 |
| சர்வஜன அதிகாரம் | 1,937 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 59,228 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,110 | |

### ரம்புக்கனை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 22,723 | 21 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 6,334 | 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 6,286 | 5 |
| ஐக்கிய தேசிய கட்சி | 4,326 | 4 |
| சர்வஜன அதிகாரம் | 2,099 | 2 |
| சுயேச்சைக்குழு | 1,379 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 43,365 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 904 | |

### கேகாலை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 20,815 | 19 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,068 | 6 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 5,423 | 4 |
| சர்வஜன அதிகாரம் | 1,679 | 1 |
| மக்கள் கூட்டணி | 1,569 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,509 | 1 |
| சுயேச்சைக் குழு | 1,219 | 1 |
| மக்கள் போராட்ட முன்னணி | 667 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 40,458 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 958 | |

### தெரணியகலை பிரதேச சபை

| கட்சிகள் | வாக்குகளின் எண்ணிக்கை | ஆசனம் |
|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 8,426 | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,335 | 7 |
| மக்கள் கூட்டணி | 2,049 | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,775 | 2 |
| ஐக்கிய தேசிய கட்சி | 921 | 1 |
| சர்வஜன அதிகாரம் | 645 | 1 |
| செல்லுபடியான வாக்குகள் | 23,194 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 489 | |

# போரின் தீப்பிழம்புகளை அணைத்து அமைதி நிறைந்த உலகை கட்டியெழுப்ப புத்த தத்துவத்திலிருந்து உத்வேகம் பெறுவோம்

## 20ஆவது ஐக்கிய நாடுகள் வெசாக் தின விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு





''போரின் தீப்பிழம்புகளிலிருந்து நீங்கி அமைதி நிறைந்த உலகில் அனைத்து நாடுகள் மற்றும் மக்களிடையே அமைதி, அபிவிருத்தி மற்றும் கௌரவத்தை உருவாக்க பௌத்த தத்துவத்திலிருந்து உத்வேகம் பெறுவோம்''- என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உலக மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

வியட்நாமின் ஹோ சி மின் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை (06) ஆரம்பமாகிய 20ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தினக் கொண்டாட்டங்களில் பிரதான உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போருக்குப் பின்னர் பலருக்கு துயரமும் வலியும் மாத்திரமே எஞ்சியுள்ளன. அமைதி மற்றும் ஒழுக்கத்தின் மூலம் மாத்திரமே வலியைத் தடுக்க முடியும். நூற்றுக்கணக்கான ஆண்டுகால அழுகை மற்றும் புலம்பல்களின் வேதனையான அனுபவங்கள் இருந்தபோதிலும், இதையெல்லாம் மீறி தைரியமாக எழுச்சி பெறுவதற்கான பாதையை உருவாக்கிய அற்புதமான நாடு வியட்நாம். வரலாற்றில் மிக மோசமான இரசாயன ஆயுதத் தாக்குதல்களால் மிகவும் கொடூரமான அநீதிக்கு ஆளான உங்கள் நாட்டின் சாதனைகள் குறித்து நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். எனவே, உங்கள் நாட்டை 'உறுதிப்பாட்டின் பூமி' என்று அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல், இன்னும் சில நாட்களில் கொண்டாடவுள்ள புத்தபெருமானின் பிறப்பானது ஞானம் மற்றும் மீட்சியை நினைவுகூர்கிறது. வெசாக் பண்டிகையுடன் இணைந்து நடத்தப்படும் ஐக்கிய நாடுகளின் வெசாக் தினக் கொண்டாட்டங்களை நடத்த வியட்நாமைத் தேர்ந்தெடுத்திருப்பது எங்களுக்கு மிகுந்த பெருமையைத் தருகிறது.

ஒரு வலுவான சமூகத்தில் அதிகாரம் சமமாகப் பகிரப்படுகிறது. சமத்துவம் இல்லாத போது போர் உலகம் கட்டமைக்கப்படுகிறது. 2,500 ஆண்டுகால பௌத்த வரலாற்றில் கௌதம புத்தரின் சமத்துவம் பற்றிய செய்தி எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மத்திய வழி பற்றிய அவரது போதனைகள் இன்று உலக அரங்கில் நடைமுறைச் சாத்தியமாகி விட்டன. சமத்துவத்துக்கான உயிரோட்டமான சான்றாக வியட்நாமை குறிப்பிடலாம். இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தினத்தின் கருப்பொருள் சமத்துவமாகும்.

நாம் இங்கு உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே உலகில் எங்கோ மனித நாகரிகத்துக்கெதிரான ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. போரைப் பற்றி எதுவும் தெரியாத பல்லாயிரக்கணக்கான சிறு குழந்தைகள் அதற்குப் பலியாகிறார்கள். இதன் விளைவாக பெண்கள் தங்கள் கணவர்களையும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளையும் குழந்தைகள் பெற்றோரையும் இழக்கிறார்கள். இந்த வகையில் பார்த்தால், யுத்தம் மனித நாகரிகத்துக்கு சாதனைகளை விட அதிக அழிவைக் கொண்டு வந்துள்ளது. போருக்குப் பிறகு பலருக்கு சோகமும் வலியும் மட்டுமே எஞ்சுகிறது. முப்பது வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு தேசமாக எமக்கும் அது பற்றிய அனுபவம் உண்டு. அமைதி மற்றும் ஒழுக்கம் மூலம் மட்டுமே இத்தகைய துயரத்தின் வலியைத் தவிர்க்க முடியும். அதைப் புரிந்துகொள்ளும் வரை நமக்கு துயரங்களும் வலிகளும் மட்டுமே இருக்கும்.

இதுபோன்ற சமயத்தில் அமைதியுடனும் ஒழுக்கத்துடனும் செயற்படுவதன் மதிப்பை 2,500 ஆண்டுகளுக்கு முன்பு கௌதம புத்தர் நமக்குக் கற்றுக்கொடுத்தார். இலங்கை தேசமாக, அதன் மதிப்புகளை நாம் உள்வாங்கிக் கொண்டுள்ளோம். நமது நாடு, தந்தை-மகள் உறவுகள், உறவினர்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் ஆசிரியர்-மாணவர் உறவுகளால் போசிக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மக்கள், பிறருடைய உயிரைக் காப்பாற்ற தங்கள் இரத்த தானம் செய்வதை ஒரு தானமாகக் கருதுகின்றனர். உலகில் வேறு எந்த நாட்டிலும் இதுபோல இரத்த தானம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலும், எனது நாட்டிலும் மக்கள் கண்களை தானம் செய்கிறார்கள்.

அரச நிர்வாகத்தில் முக்கியமான பத்து கொள்கைகளின் பல பெறுமதிமிக்க விடயங்களை பௌத்த தர்மம் எமக்குத் தந்துள்ளது. இந்தக் காரணத்தினால்தான் புத்த மதம் அமைதி மற்றும் சமத்துவத்தின் செய்தியை உள்ளடக்கிய ஒரு மதம் என்று நம்புகிறேன். உலகில் அனைத்தும் நிலையற்றவை என்று புத்தர் போதித்திருக்கிறார்.

இலங்கையும் வியட்நாமும் பண்டைய காலங்களிலிருந்து நெருக்கமான மற்றும் பரஸ்பர உறவுகளைக் கொண்ட இரண்டு நாடுகள். அது இன்று இன்னும் வலுவடைகிறது. இலங்கையின் தனித்துவத்தை அடியொற்றி பாய் டிங் விகாரையில் நிர்மாணிக்கப்பட்ட போதி சுவரை திறந்து வைத்தேன். அந்தச் சுவரால் மூடப்பட்டிருப்பதான இது 2023 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வியட்நாமுக்குக் கொண்டுவரப்பட்ட ஜய ஸ்ரீ மகா போதியின் ஒரு கிளையாகும்.

இவ்வாறு, பௌத்தத்தால் ஊக்குவிக்கப்பட்ட நாம், போர் அற்ற அமைதி நிறைந்த உலகம், அன்பு நிறைந்த சமூகம் மற்றும் கருணை நிறைந்த வாழ்க்கைக்காகவும், அனைத்து நாடுகள் மற்றும் அனைத்து மக்களிடையே அமைதி, வளர்ச்சி மற்றும் மரியாதையை உருவாக்குவதற்காகவும் புத்தர் போதித்த போதனைகள் மற்றும் பௌத்த தத்துவங்களிலிருந்து பயன்பெறுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்'' – என்றார்.

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியமனத்தை இரத்துச்செய்ய நீதிமன்றம் உத்தரவு

மார்க்க சங்வர்தன அதிகாரிய
Road Development Authority
வீதி அபிவிருத்தி அதிகார சபை

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2024 ஆம் ஆண்டு எஸ்.எம்.பி. சூரிய பண்டாரவை பணிப்பாளர் நாயகமாக நியமிப்பதற்கு எடுத்த தீர்மானத்தை இரத்துச்செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (08) எழுத்தாணை (ரிட்) உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அத்துடன், 2024 மார்ச் 05ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கே.டபிள்யூ. கண்டம்பியை குறித்த பதவியில் நியமிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருக்கு நீதிமன்றம் மற்றுமொரு உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

குறித்த நியமனத்தை சவாலுக்குட்படுத்தி, கண்டம்பி தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (08) இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற குழாம் முன்னிலையில் குறித்த மனு இன்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது இத்தீர்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வழக்கு விசாரணையின்போது மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, தனது கட்சிக்காரர் ஒரு சிவில் பொறியியலாளர் என்றும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் சுமார் 23 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த ஊழியர் என்றும் நீதிமன்றத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதாகவும், அதில் பங்கேற்ற மனுதாரர் 61 புள்ளிகளைப் பெற்றதாகவும் பைசர் முஸ்தபா இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், தனது கட்சிக்காரரை விட குறைந்த புள்ளிகளைப் பெற்ற SMP, சூரியபண்டாரவை அந்தப் பதவிக்கு நியமிக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2024 மார்ச் 05ஆம் திகதி முடிவு செய்ததாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தனது கட்சிக்காரரை விடக் குறைந்த புள்ளியைப் பெற்ற ஒருவரை அந்தப் பதவியில் நியமிப்பது சட்டத்துக்கெதிரானது என்றும் அந்த முடிவை செல்லுபடியற்றதாக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த பின்னர் தீர்ப்பை அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் தாஹிர், இந்த நியமனத்தை மேற்கொள்வதில் பிரதிவாதிகள் நியமன நடைமுறையை மீறியுள்ளதாக அறிவித்துள்ளார்.

அதன்படி, இந்த செயன்முறை முற்றிலும் சட்டவிரோதமானதென தீர்ப்பளித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அதன் பின்னர் குறித்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# அதிக விலைக்கு குடிநீர் போத்தலை விற்பனைசெய்த பல்பொருள் அங்காடி

## ரூ. 2 மில்லியன் அபராதம் விதிப்பு

யூனியன் பிளேஸில் அமைந்துள்ள ஒரு பல்பொருள் அங்காடியொன்றுக்கு அதிக விலைக்கு குடிநீர் போத்தலை விற்பனை செய்தமைக்காக ரூ.2 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் குடிநீர் போத்தல்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நுகர்வோர் விவகார அதிகாரசபை கடந்த ஏப்ரல் முதலாம் திகதி நிர்ணயித்துள்ளது. அதை மீறியமைக்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பல்பொருள் அங்காடியில் நுகர்வோர் விவகார அதிகாரசபை ஏப்ரல் 23 ஆம் திகதி சோதனை நடத்தியதில் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவேண்டிய குடிநீர் போத்தல் 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்த வழக்கு நேற்று (08) புதுக்கடை இலக்கம் 5 பிரதான நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அந்த பல்பொருள் அங்காடி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் திருவிழாவில் யானைக்கு மதம் பிடித்து தாக்கியதால் குழந்தை உள்ளிட்ட மூவர் காயம்!

**(பு.கஜிந்தன்)**

யாழ்ப்பாணம் - தாவடி பகுதியிலுள்ள ஆலயமொன்றில் யானை தாக்கிய நிலையில், 4 வயது குழந்தையொன்றும் இரண்டு பெண்களும் காயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த ஆலயத்தில் திருவிழா நடைபெற்று வரும் நிலையில், திருவிழாவுக்கு யானை கொண்டுவரப்பட்டது. இதன்போது யானைக்கு மதம் பிடித்துள்ளது.

இவ்வாறு மதம் பிடித்த யானை தாக்கியதில் இரண்டு பெண்களும், நான்கு வயது குழந்தையும் காயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# லாகூருக்கான இலங்கை விமான சேவை இரத்து

பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கையிலிருந்து பாகிஸ்தான் லாகூர் வரை பயணிக்கும் சகல விமானப் போக்குவரத்தையும் மீள் அறிவிப்பு வரை இடைநிறுத்துவதாக ஸ்ரீலங்கா விமான சேவை அறிவித்துள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையில் நிலவும் யுத்த மோதலால் நேற்று (08) காலை பாகிஸ்தான் லாகூர் நகரில் தொடர் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

லாகூர் விமான நிலையம் மூடப்பட்டுள்ள நிலையில், இந்தப் பகுதியிலுள்ள அமெரிக்க பிரஜைகளை வெளியேறுமாறு அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. அதற்கமைய, ஏனைய நாடுகளும் லாகூருக்கான விமான சேவைகளை இரத்துச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழில் மின்னல் தாக்கி ஆணொருவர் மரணம்!

**(பு.கஜிந்தன்)**

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை பகுதியில் மின்னல் தாக்கி நேற்று (08) ஆணொருவர் உயிரிழந்துள்ளார். இதன்போது ஏழாலை கிழக்கு, ஏழாலை என்ற முகவரியைச் சேர்ந்த குணரட்னம் குமரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் நேற்று (08) தனது தோட்டத்தில் மிளகாய் ஆய்ந்துகொண்டிருந்தார். இதன்போது மின்னல் தாக்கியது.

இந்நிலையில், சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட கைபேசிகளுடன் சந்தேகநபரொருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளுடன் வர்த்தகரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் (07) விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் புதுக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய வர்த்தகராவார்.

சந்தேக நபரான வர்த்தகர் டுபாயிலிருந்து நேற்று முன்தினம் (07) காலை 08.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலையக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் கொண்டுவந்த இரண்டு பயணப் பொதிகளிலிருந்து 91 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

# 300 கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது




யாழ்ப்பாணம், எழுவைதீவுக்கப்பால் வடக்கு கடலில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, 300 கிலோ கேரள கஞ்சாவுடன் மூவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு கடற்படைக் கட்டளைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இலங்கை கடற்படை எழுவைதீவு கடல் பகுதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது அந்தக் கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான டிங்கி படகு ஒன்று பயணிப்பதை அவதானித்து சோதனை செய்யப்பட்டது. இதனையடுத்து மூன்று சந்தேக நபர்களுடன் டிங்கி படகையும் எட்டு பொதிகளில் 139 பொதிகளாக பொதிசெய்யப்பட்டிருந்த 301 கிலோகிராம் கேரள கஞ்சாவையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 120 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருக்குமென்று கருதப்படுகிறது.

மேலும், இந்த நடவடிக்கையின்போது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 43 முதல் 58 வயதுக்குட்பட்ட மன்னார் ஒலுதுடுவாய் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

மூன்று சந்தேக நபர்களுடன் கேரள கஞ்சா பொதிகள் மற்றும் டிங்கி படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன.

# மீட்டியாகொட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்:

## சந்தேகநபர்கள் மேலும் மூவர் கைது

மீட்டியாகொட - தம்பஹிட்டிய பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு அருகில் அண்மையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மீட்டியாகொட மற்றும் கஹவ பகுதிகளைச் சேர்ந்த 27, 40 மற்றும் 44 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரையில் 5 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் தம்பஹிட்டிய பகுதியிலுள்ள உணவகமொன்றுக்கருகில் இரண்டு சைக்கிள்களில் பயணித்த குழுவொன்றால் கடந்த 3ஆம் திகதி இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரும் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாத்தறை - அக்குரஸ்ஸ வீதியில் வேன் விபத்தில் 12 பேர் காயம்



மாத்தறை - அக்குரஸ்ஸ பிரதான வீதியில் நேற்று (08) காலை பயணித்த வேன் ஒன்று, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பலட்டுவ பகுதியில் உள்ள வெளியேறும் இடத்துக்கருகில் வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கொள்கலன் லொறியுடன் மோதியதில் 12 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

வேனில் இருந்த பயணிகள் மாத்தறை, முலட்டியன பகுதியைச் சேர்ந்தவர்களென்றும் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

1990 சுவ செரிய அம்பியூலன்ஸ் சேவையைப் பயன்படுத்தி காயமடைந்தவர்களை வைத்திய சாலைக்கு கொண்டுசெல்ல பிரதேசவாசிகளும் பொலிஸாரும் உடனடியாக நடவடிக்கை எடுத்தனர். சம்பவம் குறித்து மாலிம்படா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமைச்சரவை முடிவுகள்

## 2025.05.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




**01. அரச நிதிச் செயலாற்று தொடர்பான அறிக்கை – 2025 முதலாம் காலாண்டு**

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 53(1) பிரிவுக்கமைய குறைந்தபட்சம் காலாண்டு அடிப்படையில் நிதி விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அரச வருமானம் மற்றும் செலவு உள்ளிட்ட நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்றொன்று காலாண்டு முடிவடைந்து 45 நாட்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த ஏற்பாடுகளுக்கமைய 2025.03.31 திகதியுடன் முடிவடைகின்ற 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று 2025.05.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த 2025 ஆம் ஆண்டு வருடாந்த வரவு - செலவுத்திட்ட மதிப்பீடுகளில் குறிப்பிட்டுள்ளவாறான வகைப்படுத்தல்களின் அடிப்படையில் 2025.01.01 தொடக்கம் 2025.03.31 வரையான 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்குரிய அனைத்து விசேட செலவு அலகுகள் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மூலம் அறிக்கைப்படுத்தப்பட்ட கீழ்க்காணும் திரண்ட வருமானம் மற்றும் செலவுகளை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்டுள்ள நிதிச் செயலாற்றுகை பற்றிய அறிக்கை அமைச்சரவையால் கவனத்தில் கொள்ளப்பட்டது.

**02. பொது வழக்கு தொடுநர் அலுவலகத்தை (Public Prosecution office)ஸ்தாபித்தல்**

நீதிமன்ற முறைமையில் ஏற்படுகின்ற தாமதங்களைத் தடுக்கின்ற பொறிமுறையாக அரச வழக்கு அலுவலகமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அரசு சார்பாக வழக்கு நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வெளியே சுயாதீனமாக இயங்குகின்ற அரச வழக்கு அலுவலகமொன்றை தாபித்தல் மற்றும் மாகாண ரீதியாக உப அலுவலகங்களைத் ஸ்தாபிப்பதற்கும் சமகால அரசின் தேர்தல் பிரகடனத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. குற்றவியல் நீதி முறைமையில் சுயாதீனத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக பொதுமக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு இயலுமாகும் வகையில், குற்றவியல் நீதி முறைமையைத் துரிதப்படுத்துவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரால் 2024 செப்டெம்பர் மாதத்தில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் மூலமும் அவசர தேவையாகக் கருதி சுயாதீன வழக்கு அலுவலகமொன்று ஸ்தாபிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அவ்வாறானதொரு அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கு புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் தற்போது வலுவிலுள்ள சட்டத்தில் தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கான விதந்துரைகளைச் முன்வைப்பதற்கும் உயர்நீதிமன்ற நீதியரசர், ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொட தலைமையில் தொழில்நுட்ப நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலொஜி பிறைவேட் லிமிட்டெட் (SLINTEC) மற்றும் ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் பயோ ரெக்னோலொஜி பிறைவேட் லிமிட்டெட் (SLINTEC) போன்ற நிறுவகங்களின் பணிப்பொறுப்புகளை மீளாய்வு செய்தல்**

நனோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்துக்காக ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலொஜி பிறைவேட் லிமிட்டெட் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்துடன், உயிர்மத் தொழில்நுட்பம் சார்ந்த ஆய்வுகள் மூலம் உயிர்மத் தொழில்நுட்ப ஏற்றுமதியை விருத்தி செய்வதற்காகவும் இறக்குமதி பதிலீட்டு உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கிலும் ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் பயோ ரெக்னோலொஜி பிறைவேட் லிமிட்டெட் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சமகால உள்நாட்டு, உலகளாவிய பொருளாதாரம் மற்றும் அரசியல் போக்குகளின் கீழ் நனோ தொழில்நுட்பம் மற்றும் உயிர்மத் தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி அணுகுமுறை மூலம் இலங்கையில் துரித பொருளாதார வளர்ச்சிக்கு அதிகளவில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் குறித்த இரண்டு நிறுவகங்களை மீள்கட்டமைப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் நனோ ரெக்னோலொஜி பிறைவேட் லிமிட்டெட் மற்றும் ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒவ் பயோ ரெக்னோலொஜி பிறைவேட் லிமிட்டெட் போன்ற நிறுவகங்களின் பணிப்பொறுப்புகளை மீளாய்வு செய்து, அவற்றின் சட்ட ரீதியான கட்டமைப்பு மற்றும் மூலோபாயத் திட்டத்துக்காக மேற்கொள்ள வேண்டிய மீள்கட்டமைப்புத் தொடர்பாக விதந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக புத்திஜீவிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. லயிபொசொமால் வகை எம்பொட்டரிசின் பி ஊசி மருந்து 50 மில்லிகிராம் ஊசிமருந்துக் குப்பிகள் 30,000ஐ விநியோகிப்பதற்கான பெறுகை**

க்ரிப்டொகொகல் மெனின்ஜயிட்ஸ் மற்றும் லிஸ்மெனியாசஸ் உள்ளிட்ட உயிர் ஆபத்துக்கொண்ட நுண்ணங்கித் தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு குறிப்பாக, ஆபத்துகள் நிறைந்த நோயெதிர்ப்புத் தொகுதியைக் கொண்ட நபர்களுக்கு பயன்படுத்தப்படும் லயிபொசொமால் வகை எம்பொட்டரிசின் பி ஊசி மருந்து 50 மில்லிகிராம் ஊசிமருந்துக் குப்பிகள் 30,000 ஐ கொள்வனவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்காக மூன்று விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைக்கமைய விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளுடன் குறைந்தபட்ச விலைமுறிதாரரான M/s Slim Pharmaceuticals (Pvt) Ltd, (Manufacturer – M/s Gufic Bioscience Ltd, India) க்கு குறித்த பெறுகையின் மொத்தச் செலவு 194.26 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. முழு முழங்கால் மூட்டு மாற்று (TKR) தொகுதியை உடலில் பொருத்துவதற்கான TKR நடமாட்ட துணைக்கருவித் தொகுதிகள் 3,000 ஐ விநியோகிப்பதற்கான பெறுகை**

மோசமாகப் பாதிப்படைந்த அல்லது தேய்ந்து போன முழங்கால் மூட்டொன்றைப் பொருத்துவதன் மூலம் நடமாடுவதை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற நோயாளிக்கு ஏற்புடைய வகையில் உயரிய நெகிழ்வுத்தன்மையுடன் கூடிய முழங்கால் வகையின் முழு முழங்கால் மூட்டு மாற்றுத் தொகுதியை உடலில் பொருத்துகின்ற TKR நடமாட்ட துணைக்கருவித் தொகுதிகள் 3,000 ஐ விநியோகிப்பதற்கான சர்வதேச விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக ஒரு விலைமுறி மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முன்வைக்கப்பட்டுள்ள விலை தொடர்பாகக் கலந்துரையாடிய பின்னர் விலைமனு விலையில் 2 சதவீதக் கழிவு வழங்குவதற்கு விலைமுறிதாரரான **M/s Zimmer Pte Ltd (Manufacturer Zimmer Inc. USA)** இன் உள்நாட்டு முகவரான **M/s Zodiac Medicals (Pvt) Ltd.** உடன்பாடு தெரிவித்துள்ளது. TKR நடமாட்ட துணைக்கருவித் தொகுதிகளுக்குப் பதிலாக அவசர தேவைகளுக்காக தற்போது 1,000 TKR நடமாட்ட துணைக்கருவித் தொகுதிகளை விநியோகிப்பதற்காக சிங்கப்பூரின் M/s Zimmer Pte Ltd (Manufacturer Zimmer Inc. USA) க்கு பெறுகையை வழங்குவதற்கும் எஞ்சுகின்ற தொகையை விநியோகிப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி விலைமுறி முறைமையைக் கையாண்டு தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்களிடம் மீண்டும் விலைமனுக்களைக் கோருவதற்கும் உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழு விதந்துரைத்துள்ளது. அதற்கமைய, குறித்த விதந்துரையை அமுல்படுத்துவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. **உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின் கீழ் உயர் முன்னுரிமை மின்மாற்று அபிவிருத்திக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்**

இலங்கை மின்சார சபையால் தயாரிக்கப்பட்டுள்ள 2023 – 2032 ஆண்டுக்கான நீண்டகால மின்மாற்றுத் திட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்டுள்ள உயர் முன்னுரிமை மின்மாற்று அபிவிருத்திக் கருத்திட்டக் கோவையை நடைமுறைப்படுத்துவதற்காக முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளன. உத்தேச முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின் கீழ் 10 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அடையாளங் காணப்பட்டுள்ளது. சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்தின் மூலம் வழங்கப்படவுள்ள 10 மில்லியன் அமெரிக்க டொலர் பிணை வசதியுடன் கூடிய உலக வங்கி 40 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 30 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் முதலீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து வழங்குகின்ற முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ள உபமின் நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக 60 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் 10 மில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்தின் அனுசரணை வழங்கும் இடர் காப்பீட்டு பிணை வசதியைப் பெற்றுக் கொள்வதற்குமுரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. மன்னார் கடல்நிலப்படுக்கையின் (Mannar Basin) நான்கு ஆராய்ச்சி நிலப்படுக்கைகளில் பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயுக்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் உற்பத்திக்காக முதலீட்டு முன்மொழிவுகளைக் கோரல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆலோசகர் சேவையைப் பெற்றுக் கொள்ளல்**

2011 ஆம் ஆண்டில் கெயாரிங் லங்கா (தனியார்) கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அகழ்வுகளின் பிரகாரம், மன்னார் வளைகுடாவில் **M2** ஆராய்ச்சி நிலப்பகுதியில் இயற்கை வாயுக்கனிமங்கள் 02 கண்டறியப்பட்டுள்ளன. அதன்மூலம் மன்னார் கடல்நிலப்படுக்கையில் இதுவரை எடுக்கப்படாத ஹயிட்ரோ காபன் தொகுதி இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மற்றும் ஒழுங்குவிதிகள் மூலம் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளுக்கு இணங்கி கரைகடந்த பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயுக்கள் ஆராய்ச்சி நிலப்பகுதிக்கான முதலீடுகளைக் கோருவதற்கு இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மன்னார் கடல்நிலப்படுக்கையின் நான்கு (04) ஆராய்ச்சி நிலப்படுகைகளில் பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு மற்றும் உற்பத்திகளுக்கான முதலீடுகளைக் கோருவதற்கு அனுமதிப்பத்திர சுற்றொன்றை நடைமுறைப்படுத்தவும் குறித்த பணிகளுக்குப் பயனுள்ள சந்தைப்படுத்தல் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக பொருத்தமான சந்தைப்படுத்தல் ஆலோசகர் ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காகவும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. செலாவணிப் பத்திர கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1927 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க (82 ஆவது அத்தியாய) செலாவணிப் பத்திர கட்டளைச் சட்டத்திலுள்ள காலங்கடந்த ஏற்பாடுகளைத் திருத்தம் செய்வதற்கோ அல்லது நீக்குவதற்கோ 2024.01.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள செலாவணிப்பத்திர (திருத்தச்) சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் 2024.07.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், 2024.09.24 அன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால் குறித்த சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாமல் போயுள்ளது. அதனால், நிதி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி மற்றும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனையைக் கருத்திற்கொண்டு செலாவணிப்பத்திர (திருத்தச்) சட்டமூலத்துக்கு அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கும் மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் அங்கீகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**09. 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2023.08.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டவரைஞரால் குறித்த சட்டமூலத்தைத் தயாரிக்கின்ற பணிகளைப் பூர்த்தி செய்வதற்காக சமகால அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலத்தைத் தயாரிக்கின்ற பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்காக அமைச்சரவை கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்கும் வகையில் விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. இலங்கை உணவு விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்கான பாராளுமன்றச் சட்டம்**

உணவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் விஞ்ஞானிகளுடன் கூடிய தன்னார்வமாக நடத்திச் செல்கின்ற இலங்கை உணவு விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனம் 2004 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிறுவனம் இதுவரை வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பேணிச் செல்வதற்கு கிடைக்கின்ற அரச அனுசரணையாகவும் நிறுவனத்தின் செயன்முறையைப் பலப்படுத்துவதற்காகவும் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்குவதற்கு 2016.09.27 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பாக சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களை உட்சேர்த்து, இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2024.06.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், குறித்த சட்டமூலம் இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. இவ்விடயங் களைக் கருத்திற்கொண்டு குறித்த சட்டமூலத்தைத் தயாரிக்கின்ற பணிகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்வதற்காக அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்காக விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிச் சங்கங்களை அரச கணக்காய்வுக்கு உட்படுத்தல்**

சமுர்த்தி சமுதாய மட்ட வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாயமட்ட வங்கிச் சங்கங்களை அரச கணக்காய்வுக்குட்படுத்துவதற்காக திருத்தங்களை உட்சேர்ப்பதற்கு 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சமுர்த்திச் சட்டதிருத்தத்துக்காக 2024.12.30 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவியில் கடமையாற்றிய எச்.ஜே.எம்.சீ.ஏ.ஜயசுந்தரவின் சேவைக்காலம் 2025.05.06 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதற்கமைய, குறித்த பதவி வெற்றிடமான பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவிக்கு தற்போது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் பதவியில் கடமையாற்றுகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான திருமதி ஏ.கே.சுபாசினி இந்திக்கா குமாரி லியனகேயை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிப்பதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. அளவையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

அளவையாளர் நாயகமாகக் கடமையாற்றிய இலங்கை அளவை சேவையின் விசேட தர அதிகாரியான யூ.கே.எஸ்.பீ.விஜேசிங்க 60 வயது பூர்த்தியடைந்து 2025.01.22 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அதற்கிணங்க, வெற்றிடமாகவுள்ள அளவையாளர் நாயகம் பதவிக்கு இலங்கை நிலஅளவை சேவையின் விசேடதர அதிகாரியான வை.ஜீ.ஞானதிலக்கவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிப்பதற்காக விவசாய, கால்நடை வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க மற்றும் 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வேலையாளர்களின் வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப் புக்கிணையாக தனியார் துறை ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனத்தை அதிகரிப்பதற்குரிய 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்கச் சட்டம், 2016 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வேலையாளர்களின் வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2025.04.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, குறித்த சட்டங்களைத் திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த திருத்தச் சட்டமூலங்களை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கிண்ணியா நகர சபை அ.இ.ம.கா. வசம்

*(சீனக்குடா செய்தியாளர் கியாஸ்)*

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவின் அடிப்படையில் 4 வட்டாரங்களை வெற்றிகொண்டு கிண்ணியா நகர சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

கிண்ணியா நகர சபைக்குட்பட்ட 8 வட்டாரங்களில் 4 வட்டாரங்களை அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் 2 வட்டாரங்களை ஐக்கிய மக்கள் சக்தியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தலா ஒவ்வொரு வட்டாரத்தையும் கைப்பற்றியுள்ளன.

ஆனால், கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் கிண்ணியா நகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 5,747 வாக்குகளைப் பெற்று முதலிடத்திலும் 5,059 வாக்குகளைப் பெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இரண்டாம் இடத்திலும் உள்ளன.

2,714 வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியும் 785 வாக்குகளைப் பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியும் எந்தவொரு வட்டாரத்தையும் வெற்றிகொள்ளவில்லை.

கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் மொத்தமாக (வட்டாரம் / பட்டியல்) அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 4 உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 4 உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 3 உறுப்பினர்களையும் தேசிய மக்கள் சக்தி 2 உறுப்பினர்களையும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் தலா ஓர் உறுப்பினரையும் பெற்றுக்கொண்டுள்ளன.

இந்நிலையில் மொத்தமாக 15 உறுப்பினர்களைக்கொண்ட கிண்ணியா நகர சபையில் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# அபிவிருத்திக்கான பங்களிப்புகளை சரியானவர்களிடம் வழங்குக

## புலம்பெயர் மக்களிடம் சிறிநேசன் எம்.பி. கோரிக்கை



*(மட்டக்களப்பு செய்தியாளர்)*

''விமர்சனங்களோடு மாத்திரம் நின்றுவிடாமல் எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கான பங்களிப்புகளை சரியானவர்களிடம் கொடுக்கின்றபோது அவர்கள் வீண்விரயமில்லாமல் அபிவிருத்தியை முன்னெடுப்பார்கள்'' - என பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, செட்டிபாளையத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் புதன்கிழமை(07) மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்துக்குட்பட்ட 12 உள்ளூராட்சி மன்றங்களில் 9 உள்ளூராட்சி மன்றங்கள் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. மூன்று உள்ளூராட்சி மன்றங்கள் சகோதர முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற சபைகளாகக் காணப்படுகின்றன.

தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது. சர்ச்சைக்குரிய இந்தப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் வட்டார முறைமை தெரிவு, விகிதாசார தெரிவு அத்தோடு தொங்கு நிலையான நிலைமையும் சில இடங்களில் காணப்படுகின்றன.

வவுணதீவு பிரதேசத்தில் அமைந்துள்ள 10 வட்டாரங்களை தமிழரசுக் கட்சி வெற்றிபெற்றிருக்கின்றது. அதேபோன்று வாழைச்சேனை பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற 10 தமிழ் வட்டாரங்களை இலங்கை தமிழரசுக் கட்சி வெற்றிபெற்றிருக்கின்றது. செங்கலடி பிரதேசத்தில் காணப்படுகின்ற 14 வட்டாரங்களில் 13 வட்டாரங்களில் எமது கட்சி வெற்றிபெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையில் 20 வட்டாரங்களில் 16 வட்டாரங்களில் எமது கட்சி வெற்றிபெற்றுள்ளது. மண்முனைப்பற்று பிரதேசத்தில் தமிழ் மக்கள் வாழ்கின்ற 8 வட்டாரங்கள் காணப்படுகின்றன. அதில் 6 வட்டாரங்களை எமது கட்சி வெற்றிவாகை சூடியுள்ளது.

பத்துக்கு ஏழு, பத்துக்கு எட்டு, பத்துக்கு ஆறு, பத்துக்கு ஐந்து என்ற அடிப்படையில் எமது கட்சி ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிவாகை சூடியிருக்கின்றது. ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி முன்னிலையில் காணப்படுகிறது. அதிகளவான ஆசனங்களை மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி பெற்றிருக்கின்றது.

அதுபோன்று யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களிலும் எமது தமிழரசுக் கட்சி அதிகளவான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது.

அவ்வாறே பாராளுமன்றத்திலும் எமது மாவட்ட மக்கள் தமிழரசுக் கட்சியை வெற்றிபெற வைத்திருக்கின்றார்கள். அதுபோல் உள்ளூராட்சி மன்றத்திலும் எமது மக்கள் நமது கட்சியை வெற்றி பெற வைத்திருக்கின்றார்கள்.

எனவே, விமர்சனங்களோடு மாத்திரம் நின்றுவிடாமல் எமது பிரதேசங்களில் அபிவிருத்தி குன்றிக் காணப்படுகின்ற இடங்களில் கல்விசார அபிவிருத்திகள், பௌதிகவளம் சார்ந்த செயற்பாடுகள் போன்றவற்றுக்கான பங்களிப்புகளை சரியானவர்களிடம் கொடுக்கின்றபோது அவர்கள் வீண்விரயம் இல்லாமல் அபிவிருத்தியை அந்தந்தப் பிரதேசங்களில் செய்யமுடியும் என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் புலம்பெயர் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார்.

# அக்கரைப்பற்றில் சாரணர் பயிற்சிப் பாசறை

*(கோணாவத்தை செய்தியாளர்)*

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் வருடாந்த சாரணர் பயிற்சிப் பாசறை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இப்பயிற்சி பாசறை முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும் மாவட்ட சாரண ஆணையாளராகவுமிருந்த யூ.எல்.எம்.ஹாசிமின் வழிகாட்டலின்கீழ் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பையின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (25) தொடக்கம் 27ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இப்பயிற்சிப் பாசறைக்கு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலுமிருந்து எண்ணூறுக்கு மேற்பட்ட ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர்.

முதல் நாள் நிகழ்வில் அக்கரைப்பற்று, திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள், சங்கத்தின் தவிசாளர், தலைவர், செயலாளர் உட்பட உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள், கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

மூன்று நாட்களாக நடைபெற்ற இப்பயிற்சிப் பாசறையில் தமிழ், முஸ்லிம், சாரணர்கள் ஒன்றாக தங்கியிருந்தனர். இதனால் இன நல்லிணக்கம், புரிந்துணர்வு, பரஸ்பரம், ஒற்றுமை, சகோதரத்துவம் ஏற்படுவதற்கு பயிற்சி பாசறை வழிவகுத்ததாக ஊடகத்துக்குப் பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர் எம்.எவ்.றிபாஸ் தெரிவித்தார்.



# காத்தான்குடியில் கலந்துரையாடல்





*(எஸ்.சினீஸ் கான்)*

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் கட்சி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு மற்றும் சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வுக்குமிடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் காத்தான்குடியில் நேற்றுமுன்தினம் (07) இடம்பெற்றது.

இதன்போது காத்தான்குடி நகர சபையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

காத்தான்குடி நகர சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனைத்து வட்டாரங்களையும் வெற்றிபெற்று பத்து ஆசனங்களையும் இலங்கைத் தொழிலாளர் கட்சி ஓர் ஆசனத்தை பட்டியல் மூலமும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.





கல்முனை சுகாதாரப் பணிமனையின் ஆதரவுடன் கல்முனை, இஸ்லாமாபாத் வித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களின் பற்சுகாதாரம் மற்றும் உடற்றிணிவுச் சுட்டி கடந்த வாரம் பரிசோதிக்கப்பட்டன. அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் ஆசிரியர்களுக்கான உடல் குளுக்கோஸின் அளவும் பரிசோதிக்கப்பட்டது. இப்பரிசோதனையில் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமும் கலந்துகொண்டார். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

# மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபை

## இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 வட்டாரங்களில் தோல்வி

(மட்டக்களப்பு செய்தியாளர்)

மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோட்டையாக விளங்கிய ஐந்து வட்டாரங்களில் அக்கட்சி படுதோல்வியடைந்துள்ளது.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்தில் 11 வட்டாரங்கள் அமைந்துள்ளன.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களுவாஞ்சிக்குடி வட்டாரத்தில் இரண்டு உறுப்பினர்கள் அடங்கலாக 11 வட்டாரங்களில் 12 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

களுதாவளை வடக்கு, களுதாவளை தெற்கு, பெரியகல்லாறு மற்றும் மகிழூர் ஆகிய வட்டாரங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி படுதேல்வியடைந்துள்ளது.

மேற்படி வட்டாரங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கோட்டையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குத் தமிழர்களின் விடிவுக்காக போராடுவேன்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வேட்பாளர் சுதாகரன் தெரிவிப்பு

*(பாண்டிருப்பு நிருபர்)*

''தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மீதும் கடந்த காலங்களில் மக்களுக்கு நான் ஆற்றிய சேவையையும் மதித்து இம்முறையும் என்னை பிரதேச சபைக்குத் தெரிவுசெய்த கோட்டைக்கல்லாறு வாழ் மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்'' - என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வேட்பாளர் த.சுதாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனை தென்எருவில்பற்று களுதாவளை பிரதேச சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற த.சுதாகரன் தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மட்டக்களப்பு மண்முனை தென்எருவில்பற்று களுதாவளை பிரதேச சபைத் தேர்தலில் எனக்கு வாக்களித்து என்னை இரண்டாவது தடவையாகவும் பிரதேச சபை உறுப்பினராக தெரிவுசெய்துள்ளீர்கள்.



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மீதும் கடந்த காலங்களில் மக்களுக்கு நான் ஆற்றிய சேவையையும் மதித்து இம்முறையும் என்னை பிரதேச சபைக்குத் தெரிவுசெய்த கோட்டைக்கல்லாறு வாழ் மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைத்து மக்களுக்கும் பாரபட்சமின்றி எனது சேவையை அர்ப்பணிப்புடன் முன்னெடுப்பேன். சபையில் பொதுமக்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டால் அதற்கு எதிராக போராடுவேன். எம் மக்களின் குரலாக நான் ஒலிப்பேன்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்றும் தமிழ் மக்களின் அபிவிருத்திக்காகவும் கிழக்கு தமிழர்களின் விடிவுக்காகவும் போராடுவோம் - என்றுள்ளது.

# கடும் காற்றுடன் கூடிய மழை; மரம் வீழ்ந்து வீட்டுக்குச் சேதம்!



*(கிண்ணியா)*


திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் நடுப் பிரப்பந்திடல் பகுதி வீடொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் வீடு சேதமடைந்துள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (07) மாலை இடம்பெற்றுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், வீசிய கடும் காற்றின் காரணமாக வீட்டுக்கு முன்னாலிருந்த மரம் வீட்டின் மீது விழுந்துள்ளது. இதனால் வீட்டின் ஒரு பகுதியும் வீட்டு உபகரணங்களும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வீட்டுக்குள் புகுந்த முதலை மக்களால் பிடிக்கப்பட்டது

## மட்டு. சின்ன ஊறணியில் சம்பவம்



*(மட்டக்களப்பு)*

மட்டக்களப்பு, சின்ன ஊறணி பகுதி வீடொன்றினுள்ளிருந்து 6 அடி நீளமான முதலையொன்று கடந்த (06) செவ்வாய்க்கிழமை பொதுமக்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினம் நள்ளிரவில் கடும் போராட்டத்துக்கு மத்தியில் குறித்த முதலையை மக்கள் பிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஓரிரு தினங்களாக பெய்த மழை காரணமாக வாவிகள் மற்றும் குளங்களில் நீர் உயர்ந்துள்ளது.

இந்நிலையில், நீர்நிலைகளிலிருந்து முதலைகள் மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வருவதாக குறித்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் சின்ன ஊறணி கிராம வீடொன்றுக்குள் புகுந்த முதலை மக்களால் பிடிக்கப்பட்டு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு மக்கள் நடமாட்டமற்ற பகுதியில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அனைவரும் ஒற்றுமைப்பட்டு தமது தேவைகளை ஜனநாயக ரீதியில் பெற்றுக்கொள்ள வேண்டும்

## ஓட்டமாவடி பிரதேச சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற பைறூஸ் வேண்டுகோள்

*(மீராவோடை செய்தியாளர்)*

''நாம் அனைவரும் ஒற்றுமைப்பட்டு இந்தப் பிரதேசத்தில் எந்தெந்த தேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமோ அதை ஜனநாயக ரீதியில் பெற்றுக்கொள்ள வேண்டும்'' - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஓட்டமாவடி பிரதேச சபைக்காக 2 ஆம் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எம்.எச்.எம்.பைறூஸ் தெரிவித்தார்.

வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எனது அரசியல் பயணம் என்னை நம்பி வாக்களித்த மக்களுக்காக தொடரும். நான் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த அடையாளம் கண்டுள்ளேன். மக்கள் நலனுக்காக என்னால் முடிந்தளவு அதனை நிறைவேற்றுவேன். ஒருவர் ஒரு பதிவை முகநூலில் பதிவிட்டிருந்தார். நான் ஹராமாக உழைத்தால் தோல்வியடைவதாகவும் ஹலாலாக உழைத்தால் வெல்லுவதாகவும் என்று எழுதியிருந்தார்.

நான் ஒரு விடயத்தை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனது ஒப்பந்த நிர்மாண வேலைகளில் நான் என்றும் களவு செய்யவில்லை. மோசடி செய்யாமல் நேர்மையான முறையில்தான் எனது பணிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

இந்த அரசியலிலும் கூட யாருக்கும் அரிசியோ பணமோ கொடுக்கவில்லை. நான் வெற்றிபெற்று வந்தால் உங்கள் தேவைப்பாடுகளை செய்து தருகிறேன் என்றேன்.

பணம் கொடுத்து அரசியல் செய்தால் மக்களாகிய நீங்கள் உங்களுடைய உரிமைகளை ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள்.

உங்கள் உரிமைகளை நீங்கள் தூய்மையாக இருந்தால் மாத்திரம்தான் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் யாரும் அரிசி பண அரசியலுக்குள் சிக்க வேண்டாம். அப்படி செய்வீர்களானால் உங்களது உரிமைகள் விற்கப்பட்டு நீங்கள் நடுத்தெருவில்தான் நிற்க வேண்டி நேரிடும்.

அந்தவகையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஓட்டமாவடி - 2ஆம் வட்டார மக்கள் எனக்காக 695 வாக்குகளை அளித்திருந்தீர்கள். நான் உங்கள் மீது கொண்ட நம்பிக்கையும் நீங்கள் என்மீது கொண்ட அபிப்பிராயமும் வீண்போகவில்லை. வாக்களித்த அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சமந்த ரணசிங்க பாராளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம்




சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் நேற்று (08) பத்தாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்திய கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த கோசல நுவான் ஜயரத்னவின் மறைவையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடும் காலித் எல்.எனெனி - சபாநாயகர் சந்திப்பு



யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகப் பதவிக்குப் போட்டியிடும் கலாநிதி காலித் எல்.எனெனி இலங்கைப் பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகரைச் சந்தித்தார்.

யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு எகிப்திலிருந்து போட்டியிடும் (கலாநிதி) காலித் எல்.எனெனி இலங்கைப் பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலியை அண்மையில் (05) பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கும் எகிப்துக்குமிடையில் காணப்படும் நீண்டகால, பரஸ்பர இரு தரப்பு உறவுகள் குறித்து இச்சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், பரஸ்பரம் ஆர்வமுள்ள துறைகளில் இரு நாட்டு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான உறுதிப்பாடும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்குப் போட்டியிடும் நபர் என்ற ரீதியில் தனது எதிர்கால நோக்கத்தை வெளிப்படுத்திய கலாநிதி காலித் எல்.எனெனி, நாடுகளிடையே கலாசார ஒத்துழைப்பு மற்றும் புரிதலை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் இருப்பதாகத் தெரிவித்தார். இலங்கையின் அணிசேரா வெளியுறவுக் கொள்கை மற்றும் எகிப்துடன் காணப்படும் நீண்டகால உறவுகள் குறித்து பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி எடுத்துரைத்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான எகிப்து தூதுவர் அடெல் இப்ராஹிம் மற்றும் இலங்கைப் பாராளுமன்றத்தின் பதவியணித் தலைமையதிகாரியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ஆறு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கு தெரிவுக் குழுவால் உறுப்பினர்கள் நியமனம்

ஆறு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்குத் தெரிவுக் குழுவால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களை சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்கு மூன்று உறுப்பினர்களும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்கு மூன்று புதிய உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெரிவுக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன நேற்று (08) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய 6 துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பணியாற்றுவதற்கு பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

01. பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுவதற்காக லக்ஷ்மன் நிபுண ஆரச்சி, (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத, (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, கந்தசாமி பிரபு, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரக்கோன் மற்றும் (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

02. உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுவதற்காக மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, கே.இளங்குமரன், ரவீந்திர பண்டார, தனுஷ்க ரங்கனாத், அசித நிரோஷண எகொட வித்தான, ஷாந்த பத்மகுமார சுபசிங்ஹ மற்றும் (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

03. கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுவதற்காக அபூபக்கர் ஆதம்பாவா, (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி, (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே, சுகத் வசந்த த சில்வா, சுஜீவ திசாநாயக்க, சஞ்ஜீவ ரணசிங்ஹ மற்றும் சுனில் ராஜபக்ஷ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

04. சுகாதாரம், வெகுஜன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுவதற்காக முனீர் முலாபர், (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ, (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ, (பேராசிரியர்) சேன நாணயக்கார, (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா, ஜகத் மனுவர்ண மற்றும் ருவன் மாபலகம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

05. சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுவதற்காக ரொஷான் அக்மீமன, உபுல் கித்சிறி, (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி, சுசந்த குமார நவரத்ன, சுதத் பலகல்ல, கிட்ணன் செல்வராஜ் மற்றும் சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

06. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் பணியாற்றுவதற்காக சதுரங்க அபேசிங்ஹ, அர்கம் இல்யாஸ், லசித் பாஷண கமகே, தனுர திசாநாயக்க, (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே, (டாக்டர்) ஜனக சேனாரத்ன மற்றும் சந்திம ஹெட்டி ஆரச்சி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



அத்துடன், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக வசந்த சமரசிங்க, சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் அபூபக்கர் ஆதம்பாவா ஆகியோர் தெரிவுக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

மேலும், அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக அபூபக்கர் ஆதம்பாவா, அர்கம் இல்யாஸ் மற்றும் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன் ஆகியோரும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக சுனில் ரத்னசிறி ஆகியோரும் தெரிவுக்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## ஒரு பெரும் பாதுகாப்பு அரண்

*இந்தப் பூமியில் அல்லாஹ்வின் தண்டனை இறங்காத வண்ணம் மனிதர்களைப் பாதுகாக்கும் ஒரு பலமான அரண் காணப்படுகின்றது.*

*அது இஸ்திஃபார் எனும் பாவமன்னிப்புக் கோரலாகும். இது எத்தகைய ஒரு பாதுகாப்பு அரண் என்பதை அல்-குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:*

*“மேலும் அவர்கள் பாவமன்னிப்பைக் கேட்டுக்கொண்டிருக்கும் போது அல்லாஹ் அவர்களை வேதனை செய்வதில்லை”(8:33)*

*பாவங்களிலிருந்து விலகி வாழ்வதும் செய்யும் பாவங்களுக்காக உடனுக்குடன் மன்னிப்புக் கேட்பதும் எப்போதும் எல்லா நிலைகளிலும் இஸ்திஃபார் செய்வதும் உலக வாழ்வில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வேதனைகள், சோதனைகளிலிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு சிறந்த வழியாகும்; நாளை மறுமையின் தண்டனையிலிருந்து பாதுகாப்புப் பெறவும் இது துணை நிற்கும்.*

*ஒவ்வொரு நற்காரியமும் அருளாக அமைகின்றது; ஒவ்வொரு பாவமும் சாபமாக மாறுகின்றது.*

*ஒருவர் தான் செய்த பாவத்துக்காகவே பயப்பட வேண்டும். வேறு எவருக்கும் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை.*

*பாவங்கள் காரணமாகவே வாழ்க்கையில் கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்கள் நம்மைத் துரத்துகின்றன. அந்தப் பாவங்கள் அல்லாஹ்வுக்கு மாறு செய்ததாக இருக்கலாம் அல்லது அடுத்த மனிதர்களுக்கு செய்த அநியாயங்களாக இருக்கலாம்.*

*பாவங்களிலிருந்து விலக வேண்டும்; விடுபடவேண்டும். செய்த பாவங்களுக்காக கைசேதப்பட வேண்டும்; கண்ணீர் வடிக்க வேண்டும்; பிழை பொறுக்கத் தேட வேண்டும்; பாவமன்னிப்பு கோரவேண்டும்.*

*பாவமீட்சிக்கு வழி பாவமன்னிப்புத் தேடுவதுதான்.*

*பாவமன்னிப்புத் தேடுவது இறைவனின் தண்டனையிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் ஓர் அரண் மட்டுமல்ல, இவ்வுலக வாழ்க்கையில் நமக்கு பல நன்மைகளையும் அருட்பேறுகளையும் பெற்றுத்தரும். நபி நூஹ் (அலை) தனது சமூகத்தை விழித்துச் சொன்னதாக அல் -குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.*

*“மேலும் நீங்கள் உங்களுடைய இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்; நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்: - என்று கூறினேன்.”*

*“(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான்.*

*“மேலும் அவன் உங்களுக்குப் பொருட்களையும் புதல்வர்களையும் தருவான்; இன்னும் உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான்; உங்களுக்காக ஆறுகளையும் உண்டாக்குவான்.*

*“உங்களுக்கு என்ன நேர்ந்தது? அல்லாஹ்வின் மகத்துவத்தையும் மேன்மையையும் நீங்கள் உணராமலிருக்கின்றீர்கள்?*

*“நிச்சயமாக அவன் உங்களை பல நிலைகளிலிருந்து படைத்தான்”*

*பாவங்களிலிருந்து விலகும் போதும் செய்த பாவங்களுக்காக மன்னிப்புக் கோரும்போதும் எல்லா வகையான நெருக்கடிகளுக்கும் தீர்வு கிடைக்கும்; கவலைகள் நீங்கும்; எதிர்பாரத விதத்தில் வருமானம் கிட்டும் என்று சுப செய்தி சொல்லும் நபி மொழிகள் உள்ளன.*

*நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூட ஒரு நாளைக்கு குறைந்தது நூறு விடுத்தம் இஸ்திஃபார் எனும் பாவமன்னிப்புக் கோருவார்கள்.*

*நபித் தோழர் அபூ ஹுரைரா (றழி) சொல்கின்றார்:*

*“நான் ஒரு நாளைக்கு பன்னிரெண்டாயிரம் தடவைகள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுகின்றேன்.”*

*ஹஸனுல் பஸரி (ரஹ்) சொல்கின்றார்:*

*“வீடுகளிலும் உணவு மேசைகளிலும் தெருவிலும் சந்தையிலும் நீங்கள் எங்கிருந்த போதிலும் அதிகம் அதிகம் இஸ்திஃபார் செய்யுங்கள். அல்லாஹ்வின் மஃபிரத் எனும் மன்னிப்பு எப்போது இறங்கும் என்பது உங்களுக்குத் தெரியாது.”*

*எனவே, நாம் பாவங்களிலிருந்து விலகுவோம்; பாவ மன்னிப்புக் கோருவோம்!*

*இது மிகப் பெரும் பாதுகாப்பு அரணாகும்.*

# 33ஆவது தடவையாக பண்டெஸ்லிகா சம்பியனான பேயர்ன் முனிச்



புகழ்பெற்ற உதைபந்து லீக் தொடரான பண்டெஸ்லிகா தொடரின் சம்பியன் பட்டத்தை பேயர்ன் முனிச் கைப்பற்றியது.

பேயர்ன் முனிச் மற்றும் ஆர்.பி. லேப்ஜிக் அணிகள் மோதிய 32ஆவது போட்டிநாள் ஆட்டம் 3-3 என்ற கோல்கள் கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. எனினும், புள்ளிகள் கணக்கில் பேயர்ன் முனிச் சம்பியன் பட்டம் வென்றது. இது பேயர்ன் முனிச் அணிக்கு 33ஆவது சம்பியன் பட்டமாகும். நட்சத்திர வீரர் தோமஸ் முல்லருக்கு 13ஆவது பண்டெஸ்லிகா சம்பியன் பட்டம் ஆகும். ஆனால், இங்கிலாந்து அணித் தலைவர் ஹரி கேனுக்கு இதுதான் முதல் சம்பியன் பட்டம். 2010 முதல் 2023 வரை டோட்டன்ஹாம் ஹாட்ஸ்புர் அணிக்காக 317 போட்டிகளில் விளையாடிய ஹரி கேனால் ஒருமுறை கூட சம்பியன் பட்டத்தை வெல்ல முடியவில்லை. இதன்மூலம் பட்டம் பெற முடியாத தனது நீண்டகால சாபத்துக்கு ஹரி முற்றுப்புள்ளி வைத்தார்.

# உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் பலி!

**பு.கஜிந்தன்**

யாழ்ப்பாணம் - அராலி பகுதியில் உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு நேற்று முன்தினம் (07) இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை என்ற முகவரியைச் சேர்ந்த பத்மநாதன் தனீஸ் வரன் (வயது 38) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு (07) தனது உழவு இயந்திரத்தின் கீழே இறங்கி நின்றவாறு உழவு இயந்திரத்தை இயங்கச் செய்துள்ளார். இதன்போது கியர் இயக்கத்தில் இருந்த உழவு இயந்திரம் திடீரென இயங்க ஆரம்பித்தது. இந்நிலையில், நிலைக்குலைந்த குறித்த குடும்பஸ்தர் கீழே விழுந்ததால் அவர்மீது உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறியது.



இச்சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.


# டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்த ரோஹிட்

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவரான ரோஹிட் சர்மா டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக திடீர் அறிவிப்பை விடுத்துள்ளார். இது ரசிகர்களிடத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இங்கிலாந்து அணியுடன் அடுத்த மாதம் ஆரம்பமாகும் டெஸ்ட் தொடருக்கான அணியில் தனக்கு வாய்ப்புக் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்த நிலையில், அவர் தனது டெஸ்ட் ஓய்வை அறிவித்துள்ளார். கடந்த ஆண்டு ரி20 சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வை அறிவித்த ரோஹிட் சர்மா இனி தொடர்ந்து ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

38 வயதான ரோஹிட் சர்மா கடந்த 2013ஆம் ஆண்டு இந்திய டெஸ்ட் அணியில் அறிமுகமாகி இதுவரை 67 டெஸ்ட் போட்டிகளில் 12 சதங்கள், 18 அரைச்சதங்களும் அடங்கலாக மொத்தமாக 4,301 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 20ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகிறது.



# கரப்பந்தாட்டப் போட்டியில் பிறைந்துறைச்சேனை சாதுலியா அணி சம்பியனாகத் தெரிவு

**(மீராவோடை செய்தியாளர்)**

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைக்கிடையில் அண்மையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலய 16 வயதுக்குட்பட்ட அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.



போட்டியில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும் மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் எம்.எல்.நிஜாம்தீன், அவர்களைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற இலங்கை மகளிர் அணி



**(அகீல் சிஹாப்)**

கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்றுவரும் முத்தரப்பு மகளிர் ஒருநாள் சர்வதேச தொடரில் இந்திய அணியுடனான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 23 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிய நிலையில், இலங்கை அணி நேரடியாக இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும் வாய்ப்பைப் பெற்றது. அதன்படி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதிப்போட்டியில் இலங்கை - இந்திய மகளிர் அணிகள் மோதுகின்றன.

நடப்பு முக்கோண ஒருநாள் தொடரில் இதுவரையில் 5 போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இந்திய அணி 6 புள்ளிகளுடன் முதலிடத்திலும் இலங்கை அணி 4 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் தென்னாபிரிக்க அணி புள்ளிகளின்றி மூன்றாமிடத்திலும் உள்ளன.

இலங்கை – தென்னாபிரிக்க அணிகள் மோதும் கடைசி லீக் ஆட்டம் இன்று நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியைத் தழுவினாலும் இறுதிப்போட்டிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 59

**லக்னோ VS பெங்களூரு**

லக்னோ - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 57

கொல்கத்தா - 179/6 (20)

சென்னை - 183/8 (19.4)

சென்னை 2 விக்கெட்களினால் வெற்றி

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 28

**லாஹூர் VS பெஷாவர்**

ராவல்பிண்டி - இரவு 8.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 26

குவெட்டா - 263/3 (20)

இஸ்லாமாபாத் - 154/10 (19.3)

குவெட்டா 109 ஓட்டங்களினால் வெற்றி

# வவுனியாவில் 3,000 நாட்களைக் கடந்த காணாமல்போன உறவுகளின் போராட்டம்!








(சி.திவியா)

தமிழர் தாயக காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது நேற்று முன்தினத்துடன் (07.05) 3,000 நாளை எட்டியுள்ளது. இந்நிலையில், தொடர்ந்தும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இறுதிப் போரின்போதும் அதற்கு முன்னரும் காணாமல்போன தமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா தபால் அலுவலகத்துக்கு அருகில் சுழற்சி முறை உணவுத் தவிர்ப்புப் போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், போராட்டம் ஆரம்பித்து நேற்று முன்தினத்துடன் மூவாயிரம் நாட்களைக் கடக்கின்ற நிலையிலும் அவர்களது போராட்டம் தீர்வின்றித் தொடர்ந்து செல்கின்றது. இதனையடுத்து, அவர்களால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் ஐரோப்பிய அமெரிக்கக் கொடிகளை ஏந்தியிருந்ததுடன், தங்களுக்கு சர்வதேச நீதி வேண்டுமென்பதையும் வலியுறுத்தியிருந்தனர்.

## யாழில் தச்சு தொழிலாளி பட்டறை வாள் வெட்டி உயிரிழப்பு!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம், ஏழாலை பகுதியில் தச்சுவேலை செய்துகொண்டிருந்த தொழிலாளியொருவர் பட்டறையின் வாள் வெட்டி உயிரிழந்துள்ளார்.

ஏழாலை மத்தி, ஏழாலை பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெகாஸ் (வயது 42) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் தனது வேலைத்தலத்தில் வேலைசெய்துகொண்டிருந்தபோது திடீரென அவரது நெஞ்சில் தச்சு பட்டறையின் வாள் வெட்டி படுகாயமேற்பட்டது. இதனால் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

இருப்பினும், பலத்த காயம் காரணமாக அவர் உயிரிழந்தார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மல்லாகத்தில் பதில் மரண விசாரணை அதிகாரி நியமனம்

(யாழ். நிருபர்)

மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளுக்கான பதில் மரண விசாரணை அதிகாரியாக நமசிவாயம் பிரேம்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரைகாலமும் கடமை புரிந்த திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமாருக்கு மேலதிகமாக மேற்குறித்த பகுதிகளுக்கான பதில் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதியமைச்சின் செயலாளரால் இந்த நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் 90 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸாரால் ஒரு பெரல் கசிப்புடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாலிக்குளப் பகுதியில் வைத்து குறித்த நபர் நேற்று முன்தினம் (07) கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 90 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த வுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மக்கள் ஆணைக்கு தலைவணங்குகிறோம்

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



''நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் தமிழ்த் தேசியப் பயணத்தை ஏற்று, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு தலைவணங்குகிறேன்'' - என பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுடனான சந்திப்பு, கட்சியின் மாவட்டப் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது;

''அண்மைய தேர்தல்களைக் காட்டிலும் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எமது மக்கள் வாக்குகளால் வலுச்சேர்த்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் எமது கட்சிக்கு வாக்களித்து, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய சபைகளில் நாம் ஆட்சியமைக்கக் காரணமாக இருந்த மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து, அவர்களின் மன உணர்வுகளோடு இணைந்த வகையில் எமது தமிழ்த் தேசிய அரசியல் பயணம் தொடரும்'' - என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வேட்பாளர்கள், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலும் புனித திரேசா தேவாலயத்திலும் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையால் ஒழுங்கமைக்கப்பட்ட மத வழிபாட்டு ஆராதனைகளிலும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணத்தில் தேர்தல் வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைதான இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து இணுவில் பகுதியில் வெற்றிபெற்ற வேட்பாளரின் ஆதரவாளர்கள் அப்பகுதியில் வெடி கொளுத்தி வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது, குறித்த தேர்தலில் தோல்வியுற்றவரும் அவரது சகோதரனும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் தேர்தலில் தோல்வியுற்றவரையும் அவரது சகோதரனையும் கைதுசெய்து நேற்று மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

சகோதரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணியின் பிணை விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மன்று இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்தது.

### உள்ளூராட்சி மன்றத் தேர்தல்-2025

# வெற்றிபெற்ற இ.தொ.கா. வேட்பாளர்களுக்கு வாழ்த்துகள்; வாக்களித்த மக்களுக்கும் நன்றி

### பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



"2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாழ்த்துகளையும் வெற்றிபெற வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்" – என்று இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

"இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சேவல் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டு 55,241 வாக்குகளைப்பெற்று 39 உறுப்பினர் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

அதனடிப்படையில் நுவரெலியா மாநகர சபையில் 02 உறுப்பினர்கள், தலவாக்கலை-லிந்துலை நகர சபை 02 உறுப்பினர்கள், ஹட்டன்-டிக்கோயா நகர சபை 02 உறுப்பினர்கள், நுவரெலியா பிரதேச சபை 06 உறுப்பினர்கள், அக்கரப்பத்தனை பிரதேச சபை 04 உறுப்பினர்கள், அம்பேகமுவ பிரதேச சபை 02 உறுப்பினர்கள், ஹங்குரான்கெத்த பிரதேச சபை 02 உறுப்பினர்கள், கொட்டகலை பிரதேச சபை 05 உறுப்பினர்கள், நோர்வூட் பிரதேச சபை 06 உறுப்பினர்கள், கொத்தமலை பிரதேச சபை 08 உறுப்பினர்கள் என மொத்தம் 39 உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

மேலும், நுவரெலியா மாவட்டம் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில்15 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது. இதில் மாத்தளை மாவட்டத்தில் 06 உறுப்பினர்களையும் கண்டி மாவட்டத்தில் 04 உறுப்பினர்களையும் பதுளை மாவட்டத்தில் 04 உறுப்பினர்களையும் இரத்தினபுரி மாவட்டத்தில் 01 ஆசனத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மொத்தமாக இ.தொ.கா.சேவல் சின்னத்தில் போட்டியிட்ட மாவட்டங்களில் 54 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளமை இ.தொ.காவுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அதேபோல், இ.தொ.காவின் மக்களுக்கான சேவை என்றும் தொடரும்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மீது நம்பிக்கை கொண்டு வாக்களித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இ.தொ.காவின் வெற்றிக்கு அயராது உழைத்த தொண்டர்கள், பொறுப்பாளர்கள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், அரச உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்" – எனவும் ஜீவன் குறிப்பிட்டார்.

## நுவரெலியா மாவட்டத்தில் பல சபைகளில் ஆட்சியமைக்க அரசியல் கட்சிகள் பேச்சு

நுவரெலியா மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற முடியாத நிலையில், பல சபைகளில் ஆட்சியை அமைப்பதற்கான கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தலவாக்கலை, கொட்டகலை, கொத்மலை, நுவரெலியா, ஹட்டன்-டிக்கோயா, மஸ்கெலியா, அக்கரப்பத்தனை, மிம்புலாகம உள்ளிட்ட பிரதேச சபைகளில் எந்தவொரு தனிக்கட்சியாலும் ஆட்சியை அமைக்க முடியாத சூழ்நிலையில், இ.தொ.கா. மற்றும் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர்கள் சந்தித்து ஆலோசனைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்காக இரு கட்சிகளின் சபைத் தலைவர்கள் அண்மையில் முறையே விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய, ஊவா, சப்ரகமுவ மலைநாட்டு மாவட்டங்களில் உள்ள மலையக மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள பிரதேச சபைகளிலும் கூட்டணி ஆட்சியமைக்கும் நோக்கில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

## பதுளை மாவட்டத்தில் தொடரும் மழை: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(எம்.ஏ.எம்.ஹசனார்)

மலையகத்தில் பெய்துவரும் அடைமழையால் பல்வேறு இடங்களில் மண் சரிவு மற்றும் வெள்ள நீர் புகுந்துள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

பதுளை மாவட்டத்திலுள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் வயல் வெளிகள், நீர் நிலைகள் போன்றவற்றில் மழை நீர் நிரம்பி பெருக்கெடுத்துள்ளது.

இந்நிலையில், வெலிமடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை (07) பெய்த அடைமழை காரணமாக பண்டாரவளை - வெலிமடை வீதி வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்து பாதிப்படைந்துள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# இ.தொ.காவினரின் தீர்வே மாநகர சபை ஆட்சியின் தலையெழுத்தை நிர்ணயிக்கும்

### மாத்தளை மாநகர முன்னாள் முதல்வர்

(எம்.எஸ்.எம். மஸாஹிம்)



மாத்தளை மாநகர சபையின் ஆட்சி அதிகாரத்தை நிர்ணயிக்கும் சக்தி தமது கட்சிக்கே உள்ளதெனவும் தமது இரண்டு உறுப்பினர்களின் தீர்வே மாத்தளை மாநகர சபையின் ஆட்சியின் தலையெழுத்தை நிர்ணயிக்குமெனவும் மாத்தளை மாநகர சபைக்குத் தெரிவாகியுள்ள முன்னாள் மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாநகர சபையின் தேர்தல் முடிவுகளின் படி தேசிய மக்கள் சக்தி 10 உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட ஏனைய எதிர்க்கட்சிகள் 12 உறுப்பினர்களையும் பெற்றுக்கொண்டுள்ளன.

12 உறுப்பினர்களைக் கொண்ட எதிர் அணியினர் மாத்தளை மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள பல வியூகங்ககளை முன்னெடுத்து வருகின்றனர்.

எதிர் அணியினர் பெற்றுக்கொண்டுள்ள 12 உறுப்பினர்களில் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு 2 உறுப்பினர்களைத் தனதாக்கிக் கொண்டுள்ள இக்கட்சியின் முன்னாள் மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷிடம் வினவிய போது, மாத்தளை மாநகர சபையின் ஆட்சியை அமைக்கும் சக்தி தமது கைகளிலேயே தங்கியுள்ளது. ஆட்சியை அமைத்துக்கொள்ள ஆளும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர் அணியினர் தங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர். தமது கட்சியின் பொதுச் செயலாளர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பியதும் கட்சி எடுக்கும் முடிவுகளின் படி தமது ஆதரவு தேசிய மக்கள் சக்திக்கா அல்லது ஐக்கிய மக்கள் சக்திக்கா என்பது முடிவு செய்யப்படும். அதுவரை தம்மால் எதுவித முடிவையும் கூறமுடியாதெனவும் சந்தனம் பிரகாஷ் மேலும் தெரிவித்தார்.

## சுற்றுலாப் பயணிகளை தாக்கிய காட்டு யானை

(எம்.ஏ.எம்.ஹசனார்.)



வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற ஜீப்பை சினங்கொண்ட காட்டு யானை யொன்று புரட்டிச் சென்றதாக சரணாலய வன அதிகாரிகள் தெரிவித்தனர். யால சரணாலயத்தைப் பார்வையிடச் சென்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற ஜீப் ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை (06) உணவு தேடி வீதிக்கு வந்த காட்டு யானை உணவு கிடைக்காததால் கோபமடைந்து குறித்த வாகனத்தைத் தாக்கிய பின்னர் அதனைப் புரட்டி விட்டுச் சென்றதாகவும் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் உயிராபத்தோ காயங்களோ ஏற்படவில்லையெனவும் வாகனத்தில் பயணித்தவர்கள் கூக்குரலிட்டதில் அங்கிருந்து யானை நகர்ந்து சென்றதாகவும் யால சரணாலய வன அதிகாரிகள் தெரிவித்தனர்.







## இந்திய – பாக். எல்லையில் பெரும் பதற்றம்

# ‘ஒபரேஷன் சிந்தூர்’ இன்னும் முடியவில்லை

### மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிப்பு

இந்தியா மற்றும் பாகிஸ்தானிடையே போர் பதற்றம் உச்சத்திலிருக்கும் நிலையில், நேற்று (08) பிரதமர் மோடியை சந்தித்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் தயார்நிலை குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார். எல்லையில் பதற்றம் நிலவி வரும் நிலையில், இந்தச் சந்திப்பு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

**‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்கிறது**

‘‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்ந்து வருகிறது’’ என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். இந்நிலையில், இந்தியாவில் 15 நகரங்களில் பாகிஸ்தான் நடத்தவிருந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளதென பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது.


இந்திய யூனியன் பிரதேசங்களில் ஒன்றான ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலம் மீது பாகிஸ்தான் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. காஷ்மீரின் பாரமுல்லா, உரி, பூஞ்ச் பகுதிகளில் கனரக பீரங்கிகளை பாகிஸ்தான் பயன்படுத்தி வருகிறது.

காஷ்மீரின் குப்வாரா, பூஞ்ச், ரஜோரி, மெந்தார் உள்ளிட்ட நகரங்கள் மீதும் தாக்குதலை நடத்தியது. இந்நிலையில், இதற்கு இந்திய ஆயுதப்படைகள் பதிலடி கொடுத்து வருகின்றன.

**லாகூர் இராணுவ நிலைகள் மீது தாக்குதல்**

எல்லையிலிருந்து ஏறக்குறைய 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள லாகூரில் இராணுவ நிலைகள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது.

இதில், லாகூரிலுள்ள பாகிஸ்தானின் வான் பாதுகாப்புப் பிரிவான எச்.கியூ.-9 தாக்கி அழிக்கப்பட்டது. பீரங்கிகொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட பாகிஸ்தானின் முயற்சியையும் இந்தியா முறியடித்துள்ளது.



இதேபோன்று ட்ரோன்களைக்கொண்டு தாக்க முயன்ற அந்நாட்டு முயற்சியையும் இந்திய இராணுவம் முறியடித்துள்ளது. பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு ரேடார்கள் தகர்க்கப்பட்டன. வான் தடுப்புப் பிரிவையும் இந்தியா தாக்கி அழித்தது. இந்தியாவின் இந்தப் பதிலடி தொடர்ந்து வருகிறது.

இதில், ஜம்மு, ஸ்ரீநகர், பதன்கோட், ஜலந்தர், லூதியானா, ஆதம்பூர், சண்டிகார் உள்ளிட்ட 15 நகரங்களைத் தாக்க முயன்ற பாகிஸ்தானின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. பஞ்சாப்பின் ஜலந்தர், லூதியானா, ஆதம்பூர், சண்டிகார் ஆகிய நகரங்களிலும் காஷ்மீரின் ஜம்மு, ஸ்ரீநகர், பதன்கோட் உள்ளிட்ட நகரங்களிலும் தாக்குதலை பாகிஸ்தான் தீவிரப்படுத்திய நிலையில், அதனை இந்தியா முறியடித்துள்ளது. இந்தியா மீது இதுவரை பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் இதுவரை 3 பெண்கள் உட்பட 16 பேர் பலியாகியுள்ளனர்.

**எல்லைப் பகுதியில் சந்தேகிக்கப்படும் நபரைக் கண்டதும் சுட உத்தரவு**

ராஜஸ்தானை ஒட்டிய பாகிஸ்தான் எல்லையில் சந்தேகிக்கப்படுபவர்கள் இருந்தால் கண்டதும் சுட எல்லை பாதுகாப்புப் படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் மட்டுமன்றி, எல்லையையொட்டிய பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களிலும் இந்திய இராணுவம் தயார்நிலையிலுள்ளது. ராஜஸ்தானைப் பொறுத்தவரை பாகிஸ்தானுடன் 1,037 கிலோ மீற்றர் எல்லையைப் பகிர்கிறது. இந்த எல்லைப்பகுதி முழுதும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமானோர் நடமாட்டம் தெரிந்தால் கண்டதும் சுட, எல்லை பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்திய விமானப் படையும் எல்லைப் பகுதியில் தயார் நிலையிலுள்ளது. ஜோத்பூர், கிஷான்கர்க், பிகானர் விமான நிலையங்கள் இன்று (09) வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லையில் ஏவுகணை தடுப்பு சிஸ்டம், ட்ரோன் தடுப்பு சிஸ்டம் ஆக்டிவேட் செய்யப்பட்டுள்ளன. ஏவுகணைகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதேபோல் பஞ்சாப் எல்லையிலும் இராணுவம் தயார் நிலையிலுள்ளது. அரச நிகழ்வுகள் அனைத்தும் இரத்துசெய்யப்பட்டுள்ளன. பொலிஸாருக்கான விடுமுறைகள் அனைத்தும் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் மீது நேற்றுமுன்தினம் (07) இந்தியா அதிரடியாகத் தாக்குதல் நடத்தியது. ‘ஒபரேசன் சிந்தூர்’ என்ற பெயரில் பாகிஸ்தானுக்குள் 25 நிமிடங்கள் 24 ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் குண்டுகள் மூலம் இந்தியாவின் விமானப்படை தாக்குதல் நடத்தி பஹல்காம் தாக்குதலுக்குப் பழி தீர்த்துள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் எழில்மிகு பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி சுற்றுலாப் பயணிகளை சுற்றிவளைத்து பயங்கரவாதிகள் நடத்திய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத இயக்கத்தின் துணை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ஃபிரண்ட் பொறுப்பேற்றது.

இத்தாக்குதலுக்குப் பின்புலத்தில் பாகிஸ்தான் இருப்பது தெரியவந்த நிலையில், அந்நாட்டுக்கெதிரான இராஜாங்க ரீதியிலான நடவடிக்கைகளையும் இந்தியா தீவிரப்படுத்தியது. அதன்படி சிந்து நதி ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்த மத்திய அரசு, அந்நாட்டின் விமானங்கள் இந்திய வான்வெளியைப் பயன்படுத்தவும் அந்நாட்டின் கொடிகள் ஏற்றிய கப்பல்கள் இந்திய துறைமுகங்களுக்குள் நுழையவும் அதிரடியாகத் தடைகள் விதிக்கப்பட்டன. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்திவைத்ததால் அந்நாட்டுக்குச் செல்லும் செனாப் நதி வறண்டது.

நாட்டின் பாதுகாப்பு தயார்நிலையை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமர் மோடி முப்படைகளின் தளபதிகள், தலைமைத் தளபதி மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருடன் அவ்வப்போது ஆலோசனைகளை நடத்தி வந்தார். மேலும், உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோருடன் பிரதமர் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினார்.

இந்நிலையில், இந்திய நேரப்படி சரியாக நேற்றுமுன்தினம் (07) அதிகாலை 1.05 மணியளவில் பாகிஸ்தான் மீது தாக்குதல் தொடுத்தது இந்தியா. இந்தத் தாக்குதலில் அங்கு செயற்பட்டுவந்த பயங்கரவாத பயிற்சி முகாம்களை இந்தியா தரைமட்டமாக்கியது. லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முஹமது, ஹிஸ்புல் முஜாகிஹிதீன் ஆகிய பயங்கரவாத அமைப்புகளின் முக்கிய இடங்கள் இந்தியாவின் போர் விமானங்கள் மற்றும் ட்ரோன்களின் தாக்குதலுக்கு இரையாகின. அதிகாலை 1.30 மணி வரை சுமார் 25 நிமிடங்களில் முக்கியமான பயங்கரவாத நிலைகளை 9 இடங்களில் தீரத்துடன் இந்தியா அழித்தொழித்தது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலுள்ள பகவல்பூரில் ஜெய்ஷ்-இ-முஹமது இயக்கத்தின் தலைமையகம், முரிட்கேவில் லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தின் முக்கிய பயிற்சி மையம், சியால்கோட்டில் ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் மையமாக செயற்பட்டுவந்த மெஹ்மூனா ஜோயா மையம் இந்தியாவால் தாக்கி அழிக்கப்பட்டன. அதேபோல், ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள பிம்பரில் லஷ்கர்-இ-தொய்பா மையமாக செயற்பட்டு வந்த மையம், ஜெய்ஷ்-இ-முஹமது அமைப்பின் மையமாக செயற்பட்டுவந்த கோட்லியிலுள்ள மார்கஸ் அப்பாஸ், ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் ஆயுதங்கள் வைக்கும் இடமாகச் செயற்பட்டு வந்த இடம் உள்ளிட்டவை துல்லியமாகத் தாக்கி அழிக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குள் 8 கிலோமீற்றர் முதல் 200 கிலோமீற்றர் வரையான தூரத்திலுள்ள இலக்குகள் இந்தியாவால் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதிகளின் நிலைகளையும் கட்டமைப்புகளையும் திட்டமிட்டு குறிவைத்து தாக்குதல் நடத்திய இந்தியா, பாகிஸ்தான் இராணுவத்தின் நிலைகளைத் தாக்கவில்லையென விளக்கமளித்துள்ளது. அதேபோல், இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**‘ஒபரேசன் சிந்தூர்’இற்கு பயன்படுத்தப்பட்ட பிரத்தியேக ஆயுதங்கள்**

பாகிஸ்தான் அடைக்கலம் கொடுத்திருந்த பயங்கரவாதிகளைத் தாக்கி அழிக்க இந்திய இராணுவமும் விமானப்படையும் சக்திவாய்ந்த ஸ்கால்ப் ஏவுகணை (SCALP Missiles), ஹேமர் ரக குண்டுகள் (HAMMER Bombs) மற்றும் கமிகாஷே ட்ரோன்கள் (Kamikaze Drones) என 3 முக்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு ரஃபேல் போர் விமானங்கள் மூலம் ஸ்கேல்ப் என்ற சக்திவாய்ந்த ஏவுகணைகள் வீசி இலக்கைத் தாக்கி அழித்துள்ளன.

சுமார் 250 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட ஸ்கால்ப் ஏவுகணைகளை விமானத்திலிருந்து தரையிலுள்ள இலக்குகளை நோக்கிச் செலுத்த முடியும். அதேபோல், பதுங்கு குழிகளையும் ஆயுதங்கள் சேமிக்கும் இடங்களுக்குள் புகுந்து அந்த ஏவுகணை துல்லியமாகத் தாக்குதல் நடத்தும் திறன் கொண்டது. எம்.பி.டி.ஏ. என்ற ஐரோப்பிய நிறுவனம் தயாரித்துள்ள 1300 கிலோ எடைகொண்ட அந்த ஏவுகணையை மிரேஜ் 2000, ரஃபேல், எஸ்.யு. - 24 உள்ளிட்ட விமானங்களிலிருந்து ஏவ முடியும்.

பயங்கரவாதிகளின் இடங்களைத் தகர்த்த ஹேமர் ரக குண்டுகள் பிரான்ஸிடமிருந்து வாங்கப்பட்டவையாகும். போர் விமானங்களிலிருந்து பாகிஸ்தானுக்குள் வீசப்பட்ட அந்தக் குண்டுகள் குறைந்த உயரத்திலும் ஆழமான பகுதியிலும் தாக்குதல் நடத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து வானிலை நிலைகளிலும் முழுமையாகச் செயற்படும் அந்தக் குண்டுகளை ரஃபேல், மிராஜ் 2000D, F-16, தேஜாஸ் மற்றும் MiG-29 உள்ளிட்ட பல்வேறு போர் விமானங்களில் பயன்படுத்த முடியும். 70 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறனுடைய அந்தக் குண்டுகள் 250 கிலோ, 500 கிலோ, மற்றும் 1,000 கிலோ ஆகிய அளவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. பதுங்கு குழிகளையும் தகர்க்கும் வல்லமை இந்தக் குண்டுகளுக்கு உண்டு.

பாகிஸ்தான் மீதான தாக்குதலுக்கு இந்திய இராணுவம் "தற்கொலை விமானம்" என அழைக்கப்படும் கமிகாஷே என்ற ட்ரோனையும் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிரிகளின் இலக்கை கண்டுபிடிக்கும் வரை வானில் பறக்கும் அந்த ட்ரோன்கள், கண்டுபிடித்ததும் அங்கே விழுந்து வெடித்துச் சிதறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. திட்டமிட்ட இலக்கை தானாகத் தாக்கி அழிக்கும் கமிகாஷே வகை டிரோன்கள், ரிமோட் மூலமும் கட்டுப்படுத்தப்படும்.

## லாகூரில் தொடர் குண்டுவெடிப்பு

பாகிஸ்தானின் முக்கிய நகரான லாகூரில் நேற்று (08) காலையில் தொடர் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

இந்நிலையில், “பாகிஸ்தான் நிச்சயம் பழிவாங்கும். இந்தப் போரை இறுதிவரை எடுத்துச் செல்வோம். என் பாகிஸ்தான் மக்களே, உங்கள் பாதுகாப்புக்காக, நமது இராணுவம் நிற்கும். நாம் எப்போதும் ஒற்றுமையாக இருப்போம்.”

- இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான மோதல் பதற்றம் ஒருபுறம் இருந்தாலும் இந்த குண்டுவெடிப்பால் பாகிஸ்தானில் (‘ரெட் அலர்ட்’) சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அனைத்து அரச மருத்துவமனைகளும் தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து லாகூர் விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

3 இடங்களில் பயங்கர சப்தத்துடன் குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளன. குண்டுவெடிப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை. நேற்றுமுன்தினம் இந்திய இராணுவம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பயங்கரவாத முகாம்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தியது. இந்நிலையில், பாகிஸ்தானில் நடந்த குண்டு வெடிப்பு நாடு முழுவதும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

லாகூரில் வோல்டன் வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின்போது வானத்தில் ஒரு ட்ரோன் பறந்ததாகவும் பின்னர் அது பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இந்நிலையில், குண்டுவெடிப்பால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியே உள்ளனர்.

**12 இராணுவ வீரர்கள் பலி**

பலுசிஸ்தான் மாகாணத்தில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் மீது பலுசிஸ்தான் விடுதலை அமைப்பு போராளிகள் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் 12 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர்.

**லாகூரிலுள்ள அமெரிக்கர்கள் வெளியேற உத்தரவு**

லாகூரிலுள்ள அமெரிக்கர்கள் வெளியேற அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது. இந்தியா – பாக். இடையே ஏற்பட்டுள்ள போர் பதற்றத்தையடுத்து அமெரிக்கர்கள் வெளியேற அறிவுறுத்தியுள்ளது. லாகூரிலிருந்து வெளியேற முடியாதபட்சத்தில் பாதுகாப்பான இடங்களில் இருக்கவும் அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.



### புதிய பாப்பரசர் யார்?

## தோல்வியில் முடிந்த முதல் வாக்கெடுப்பு

புதிய பாப்பரசர் யார்? என்ற கேள்வி உலகம் முழுவதும் வியாபித்துள்ள நிலையில், புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான கர்தினால் மாநாடு வத்திக்கானில் தொடங்கியுள்ளது.

முதல் நாளான நேற்றுமுன்தினம் (07) வாக்கெடுப்பு இடம்பெற்ற நிலையில், புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்படவில்லை. நேற்று (08) மீண்டும் கர்தினால்களின் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

வத்திக்கானில் புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான முதல் வாக்கெடுப்பில் கரும்புகை வெளியேறியதால் அது தோல்வியில் முடிந்தமை தெரியவந்துள்ளது.

கத்தோலிக்க தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் (வயது - 88) காலமானதையடுத்து புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான நடைமுறைகளை கத்தோலிக்கத் திருச்சபை



தொடங்கியுள்ளது. அதன்படி சிஸ்டைன் தேவாலயத்தில் 80 வயதுக்குட்பட்ட 133 கர்தினால்களும் தங்கவைக்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் (07) இரவு முதல் கட்ட வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுபவரே புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்படும் நிலையில், கர்தினால்கள் இரகசிய முறையில் வாக்களித்தனர்.

இதில் எவருக்கும் பெரும்பான்மை அல்லது 89 வாக்குகள் கிடைக்காததால் தேவாலயத்தில் பொருத்தப்பட்ட புகைப்போக்கியில் கரும்புகை வெளியேற்றப்பட்டது. சிஸ்டைன் தேவாலயத்தின் முன்பு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்த நிலையில், அவர்கள் ஏமாற்றமடைந்தனர். இருப்பினும் புதிய பாப்பரசர் தெரிவுசெய்வதை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகக் கூறினர். புகைப் போக்கியில் கரும்புகை வெளியேறியதையடுத்து கர்தினால்கள் அனைவரும் உடனடியாக தனித்தனியாக அவர்கள் இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்கான அடுத்தகட்ட வாக்கெடுப்பு நேற்று (08) மீண்டும் நடைபெற்றது.

இன்னும் ஓரிரு தினங்களில் புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகமும் மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07